# அருணோதயம்

விற்பனை உரிமை

காசிநாத் அண் கோ

பெரியகடை வீதி

கோயமுத்தூர்

முதற் பதிப்பு 1946 ஜனவரி

உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை ரூபாய் இரண்டு

Printed at the Sadhu Press, Royapettah, Madras
Paper Issue Card No. M. S. 115 for Puthumalar Nilayam,
Coimbatore. Paper Issue Card No. B. E. 105—C. 1,000—5-2-46

புதுமலர் 16

# அருணோதயம்

கவி. கம்பதாஸன்

016601

புதுமலர் நிலையம்
கோயமுத்தூர்

## சமர்ப்பணம்

அன்புமயமாக எங்கோ
இருக்கும் ரசிக நண்பர் திரு -
ரத்தினசபாபதி அவர்களுக்கு.

# முகவுரை

"கம்பதாஸன்" ஏன் கவிபாடுகிறார்? சூரியன் ஏன் பிரகாசிக்கிறானே, ஊற்றுநீர் ஏன் பெருகி ஓடுகிறதோ, மேகம் ஏன் மழையாகப் பொழிகிறதோ அதே காரணத்திற்காகத்தான். கவி பாடுவது "கம்ப தாஸன்" இயல்பு. "உன் மனத்தில் தோன்றும் கற்பனைகள் கவிதா ரூபமாகத்தான் வெளி வருவோம் என்று உன்னை அவஸ்தைப்படுத்தினலொழிய கவி பாடாதேயப்பா" என்றார் மகர்ஷி வ. வே. சு. அய்யர். "கம்பதாஸன்" பாடத்தான் வேண்டும். பாடாமல் அவர் வாழமுடியாது.

யாப்பிலக்கணத்தின் கரைகண்ட பண்டிதர்கள் ஒரு நிமிஷத்தில் மண்முதற்கொண்டு மலைவரையில் எல்லாவற்றையும் பற்றிப் பாடிவிடுவார்கள். அவை களைப்பற்றிக் குற்றம் சொல்லமுடியாது. ஆனால் அப்பாட்டுகளைப் பாடக்கேட்டால் காதில் தேன்வந்து பாயாது. அப்பாட்டுக்களைப் படிப்பது செங்குத்தான மலைமேல் ஏறுவதுபோலிருக்கும். "கம்பதாஸன்" பாட்டுகளைப் படித்தாலும் கேட்டாலும் பெருகிவரும் நதியில் படகில் மிதந்து செல்லும் இன்பந்தரும்.

காதலியின் ஏக்கமும் களிப்பும், பாட்டாளி மக்களின் துயரமும் துன்பமும் "கம்பதாஸன்" பாட்டு களில் காணலாம். அவர் பாட்டுகளை யாவரும் பாட லாம் - படிக்கலாம் இதுதான் "கம்பதாஸனின்" தனிச்சிறப்பு. தித்திக்கும் தீஞ்சொற்கள் கொண்டு கவிதை பொழியும் கம்பதாஸன் பாக்களை ஒருதரம் கேட்டால் அதன் இன்னொலி நம் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். சந்தேகமிருந்தால் படித்துப் பாருங்கள்.

சென்னை
29-1-46

ரா. நாராயணன்,
*ஆசிரியர், "ஹிந்துஸ்தான்"*

# இரத்த ஓவியம்

அமுதம் என்னும் அழகுப் பெயராள் ;
கன்னிப் பருவம் கனிந்த வனமலர் ;
புகழ்சால் செந்தமிழ்ப் புதுவை நகர்சூழ்
கானில் ஆடும் கலாபம் ; கண்டோர்
உள்ளத் தொன்றும் ஒயில்மிகு மறத்தி ;
அம்புயம் தன்னில் அளிகள் இரண்டு
சொக்கிற் றென்ன சுடர்செய் கண்ணுள் ;
தங்கம் உருக்கித் தகதகத் திடவே
பவளப் பொடியில் பனிமலர்க் கள்ளும்
கொவ்வைக் கனியின் சாறும் கூட்டி,
அந்தித் திரையில் ஆதவன் தீட்டும்
சுந்தரச் செக்கர் தோற்றம் கண்டு
விழியும் மனமும் விண்ணில் மிதக்க
மகிழ்வில் மூழ்கி மௌனம் பற்றி
பூத்திடும் முல்லைப் புதரின் பக்கம்
வார்த்த செப்பு வடிவென நின்றுள்.
அக்கால், தனித்து அவ்வழி யாக
செவ்வே ளனைய திருநிறைக் காளை
சித்தனன் என்ற சித்திரக் கலைஞன்
வந்தான். வானை, வனிதையை நோக்கினன்.
" அற்புதக் காட்சி அமைப்பாய் ஓவியம் "
என்றே கண்ணும் இதயமும் சொல்ல ;
கீழே கிடந்த வேல்முள் எடுத்து
ஆல மரத்தை அணுகினன். விரைந்து

சால வித்தை தளிர்க்கை செய்தது.
வல்லவன் தனக்குப் புல்லும் ஆயுதம் !
அமையொடு இருளும் அணுக,
இமைகளை அசைத்தாள் எழுதொணுப் பாவை.

" இன்னும் ஒருநிமிடம்—நிற்பாய்
இமை சிமிட்டாமல் "
என்ற உரைகேட்டு—மழைமின்
என்ன உடல் நடுங்கி
கன்னிப் பருவத்தினுள்—செவ்வான்
காட்சி தனை மறந்து
முன்னும் பின்னுமாகத்—தனது
வேலின் விழி விடுத்தாள்.

விழுதுறும் ஆலமரப்—பட்டைமேல்
வேலமுள் தானேட்டி
பொழுதமர் வேளையிலே—தனது
பொன்னின் வடிவமதை
எழுதிடும் காட்சிகண்டாள்—கலைஞன்
இளமை நிலையுணர்ந்தாள்
பழுது விளைந்திடுமோ—என்றஞ்சி
பட்சி எனப்பறந்தாள் !

' கோலக் கவிதையிலும்—கண்டிடா
கோதற்ற கோமளத்தை
காலமென்பான் எனது—விழிமுன்
காட்டி மறைத்தனனே ?
நீல விண்ணை அளக்கும்—மதியை

நேர்த்த நயனங்களை
ஆல மரந்தனிலே—எழுத
யாவரே சம்மதிப்பார் ? '

என்றதோர் எண்ணமுடன்—காடி
என்ன வந்த இருளில்
சென்றனன் வாழ்குகைக்கு—எனினும்
சிந்தையில், ' அவ்வணங்கை
இன்னும் ஒருமுறைதான்—கண்டிடா
இருகண் இருந்துமென் ?
புன்னையின் பூப்போல—இரவே
புலருக ! ' எனத் துடித்தான்.

மயில்தோகை யால்வனைந்த குடிசை யொன்றில்
மலர்விழியாள் மையிருளின் மயக்கந் தன்னல்
துயிலுற்ருள். அத்துயிலில் சுடர்வான் வில்போல்
சுந்தரமாம் கனவுபல தோன்றும் வேளை
வைரம்போல் நகைஒளியை வாரி வீசும்
வடிவழகன் சித்தன்னன் வரைந்த சித்ரம்
கயற்கண்கள் பெற்றதுபோல் காட்சி கண்டு
கண்மலர்ந்தாள், காலைமலர் வேளை தன்னில்.

உள்ளத்தே நினைவெழுப்பும் நற்க னவின்
உண்மைதனைக் கண்டறிய ஆசை யுற்று
கள்ளோடு கலந்ததினை மாவைத் தின்னும்
கருத்ததனில் வெறுப்புற்றுக் குடிலை நீங்கி
முல்லைப்பூ புதரோரம் வந்து நின்ருள்.
முத்தங்கள் உடைவனபோல் உதிர்ந்த முல்லை

சொல்லுமொரு வாழ்வென்னும் சோகம் கண்டு
துடிப்புடனே ஆலமரந் தன்னைத் தொட்டாள்.

உற்றசில விநாடியிலே என்னை ஒப்ப
ஒண்உடலம்; மின்னல்இடை; ஓங்கு மார்பு;
கற்றைக்குழல்; சங்குமிடர்; வள்ளைக்காது;
கமலமுகம்; மாங்கனியின் கன்னம் தீட்டி
சுற்றுசுடர் நிகர்த்தஇரு கண்ணை மட்டும்
சோதிபெற எழுதிடவன் மறந்தான்? அந்தக்
குற்றமெலாம் எனதாகு மன்றோ? என்று
குறைபட்டாள் கண்ட கனுப் பலியாக் கோதை.

அறிவுயர்ந்த கவிஞரிலா அவையைப் போன்ற
அந்தகமாம் சித்திரத்தின் அமைப்பை நோக்கி
வெறிமனத்தாள் வெகுநேரம் நின்றாள் கங்குல்
விடியாதோ எனத்துடித்த கலைஞன், விரைந்து
மறிஎனவே புதர்தாண்டி குடைநேர்ஆல
மரம்தந்த நீழலிடை வந்தபோது
பொறிஐந்தும் வியப்பதனல் போதை கொள்ளப்
பூவிழியாள் எதிர்நிற்கும் புதுமை கண்டான்!

அமுதம்தன் கடல்விழியின் ஆழம்காட்ட
அதனைஅவன் வான்விழியால் அளந்து நகைக்க,
குமுதப்பூ செவ்விதழில் குமிண்சிரிப்புக்
குலுங்கிடவே குடத்தனத்தாள் நாணி நின்றாள்.
இமைப்போதில் அவ்விருவர் நெஞ்சிரண்டும்
எண்ணரிய ரகசியமே பேசி இறுக,
தமிழாடும் நாவழகன் தயக்கத்தோடு:—
“தயைகூர்ந்து கண்எழுதச் சற்றுநிற்பாய்!”

என்றேதன் சொல்லினிமை காட்டலானான்.
இருவிழியில் கருத்தெல்லாம் எட்டிப் பார்க்க
ஒன்றும்விள் ளாதமுதம் ஊமைபோல
ஓவியத்துப் பாவைஎன உற்றுப் பார்த்தாள்.
அன்பென்னும் சுடர்போலத் தாவி அவனே
அமுதூறும் அவளிதழாம் கமலம் தன்னில்
பொன்என்ன முத்தத்தின் புதுமைதீட்டி
புதுத்தேனை சுவைத்ததொரு வண்டே யானான்.

“ துடுக்கான செயல் செய்தாய் பெயர்தான் என்ன
சொல்லிடுக ! ” என்றமுதம் பாம்பாய்ச் சீற,
நடுக்க மொரு பக்கம்மகிழ் மற்றோர் பக்கம்
நனவிழந்த செய்கையெலாம் ஒன்றாய்க் கூடி
ஒடுக்கியது அவன்நாவை. எனினும், சொல்வான்:—
“ ஒண்டொடியே ! என்பெயர்சித் தன்ன னென்பார்.
அடுத்தமலைக் குகைதிருத்தி புதுவை வேந்தன்
அழைத்திடவே சித்திரங்கள் அமைக்க வந்தேன்.

பொன்னிநதி செந்நெல்தரு சோழ நாட்டின்
பூம்புகார் சிற்பியர்கள் மரபில் பூத்தேன்.
அன்னைஇல்லை ; தந்தையுண்டு. அவரும் என்போல்
அருஞ்சித்ரம் அயன்போல ஆக்கும் மேதை.
தன்னந்தனி யாய்நேற்று உலாவ வந்தத்
தருணத்தில் நினைக்கண்டேன். உண்மை கேட்கில் ?
என்னைஉனக் கீந்துவிட்டேன் உனைஎனக்கீய
எதிர்நிற்கும் தடை என்ன ? இன்பக் கிளியே ! ”

என்றுமொழிந் தவள்உள்ளக் குறிப்புணர்ந்து
இனிதெடுத்து மார்பணைந்து இதழோ டிதழாய்

துன்பமிலா இன்கடலின் அலைமேல் திங்கள்
சோதியெனக் கலந்திழைத்து சுகத்தைக் கண்டு
கன்னியெனில் கரும்பென்னும் முடிவு கொண்டான்
கார்கண்ட மயில்போல களிக்கும் நெஞ்சன்
அன்றுமுதற் களவொழுக்கம் அநுசரித்தான்
அறுதிங்கள் சென்றன ஓர் அந்திப் போதில்,

இருளென்ற நீலமணி மேடை மீது
எண்ணில்லா விண்மீனும் விளக்கெரித்து
விருந்துண்ணக் காதலரை வரவு கூறி
வெண்ணிலவு அல்லியென விரியும் வேளை
கருங்கூந்தல் அமுதமவள் ஆலின் கீழே
காதலனே நடந்துவரும் வழிமேல் விழியாய்
புருவங்கள் தான்நெரித்து முன்னும் பின்னும்
போய்ப்பார்த்து விரகத்தால் புழுங்க லானாள்.

கலைக்குமரன் சித்தன்னன் நிலவு தளும்பும்
காவிருந்து குயிலிசைக்கும் கீதம் கேட்டான்;
சிலையினிலே உயிர்புகுந்து திருவாம் அமுதம்
தேன்மொழியால் அழைக்கின்றாள் என்று ணர்ந்தான்.
தலைநடுங்க தன்தந்தை அடுத்தக் குகையில்
தனியிருந்து சித்திரங்கள் தீட்டு கின்றார்;
அலைபுரளும் கடலணையும் நதிபோல் யானே
அமுதத்தை கலந்தணைந்து இன்பம் காண்பேன்.

என அகமே துடிதுடிக்க இருக்கை விட்டு
எழுந்திடவும் எதிர் தந்தை, இருமிவந்து,
“ என துயிரே இளங்குமரா! இரவில் எங்கே

எதைநோக்கிச் செல்கின்றாய்? திங்களாறாய்
உனதுசெயல் மாறுதலாய் உள்ள தேடா!
உண்மையினை உரைத்திடுவாய் மேலும் நாளை
உனதுதிறல் ஓவியத்தைக் காண்பதற்கு
உலகாளும் வேந்தனுமே வருகின்றானாம்."

என்றுஅருந் தந்தைபல எடுத்துக்கூற
ஏந்திழையை அன்றிரவு காணும் வேட்கை
தன்னுளத்தே தணித்திட்டான். எனினும், காதல்
தகித்ததவன் ஜீவனையே தணலாய் நின்று.
"மன்னனுக்கு என்கடமை சித்திரம் தீட்டி
வருகின்றேன் மன்னிப்பாய் திருவே" என்று,
தென்றலின்பால் காதலிக்குச் சேதி சொல்லி
திரும்பவுமே தன்குகையிற் சென்றிருந்தான்.

"வானமதில் வட்டநிலா வந்தாற்போல
வடிவழகன் முகம்காட்ட வருவான் வருவான்
தேனிதழில் முத்தமிழைச் சேர்ப்பான் உயிரில்
தெய்வீகக் காதலொளித் திகழுமன்றோ
கானகமே! கரும்இரவே! உமக்கே நல்ல
காட்சியுண்டு! கவலையுமேன்? பொறுப்பீர்" என்று
மீன்விழியாள் இமையாது நோக்கத் தென்றல்
வந்ததன்றி சித்தன்னன் வரவே யில்லை!

சென்றதினம் காதல்குளிர் கீதம் செய்த
தென்றலது இன்றவளைத் தீயாய்த் தீண்ட,
கன்னமதில் கையூன்றி கண்ணீர் சிந்தி
கல்லாகச் சமைந்திருந்தாள். அக்கால், பின்னை

பன்னெடுநாள் பசிகொண்டு பதைத்து, தீயின்
பந்தங்கள் கண்ணேற்று வந்த வேங்கை
மென்னிடையாள் தனைக்கண்டு சீறிப் பாய்ந்து
மேல், கால், கை உடல்கிழித்து உயிர் போக்கிற்று !

தந்தையின் சொற்படி சித்தன்னனும் —வரும்
தார்வேந்தன் கண்டு மகிழுதற்கு
விந்தைகொள் சித்திரம் தானெழுதப் —பல
வித்தார யோசனை செய்திளைத்தான்.

பகல்சென் றிரவும் படர்ந்திடவே —ஒளி
பாய்ச்சிப் பொலிந்த திருவிளக்கில்
நகைத்து அமுதம் அழைத்தனளோ ! —அவன்
நடந்தனன் கான்வழி தான்நோக்கி

காதலி தன்னைப் பிரிந்திருப்போன் —நிலை
கட்டிலா வானைப் பிரிந்திருக்கும்
ஆதவன் நிலைபோ லாகுமென —யான்
அன்பாய் அவள்பால் எடுத்துரைப்பேன்.

என்னும் கருத்துடன் ஆலடிக்கீழ் —உயிர்
ஏந்திழையை எதிர்பார்த்திருந்தான்.
கன்னங் கரியதோர் கொண்டல்வந்து —வான்
காய்ந்த நிலவினை மூடியது.

பார்த்துப் பார்த்து விழிபூத்துவிட்டான் —எழிற்
பைந்தொடி வந்திடு வாளெனவே
நேத்திரம் மூடிடா கோட்டான்களும் —நடு
நிசிகண்டு மெள்ள உறங்கினவே.

'நேற்றுயான் வந்திடாக் காரணத்தை —அவள்
நெஞ்செண்ணி இன்றாடி நின்றனளோ ?
கூற்றுவன் தடுத்துக் கூறிடினும் —நாளை
குளிர்நகை காட்டியே வந்திடுவாள்'

என்னும் திடங்கொண்டு நள்ளிரவில் —மன
ஏக்கத் தோடேகிக் குகையடைந்து
மன்னன் உதயம் வருவானென —படம்
வரைந்திட தூலிகை கையெடுத்தான்.

அடர்மழையின் மூட்டந்தனில் படரும் மின்போல்
அவன் அறிவில் கற்பனையின் அலைகள் தோன்றி
நடம்புரிய லாயிற்று. அடுத்தடுத்தும்
நான்குமுறை தோன்றியவர் கருத்தைப்பற்றி
கடகடஎன் றுடும்இடிக் கூட்டம்போல
கண்களிலே பயங்கரத்தின் கவினைக் காட்ட
இடர்அடவி தனிலோர்பெண், புலியின் வாய்க்கு
இரையாகும் காட்சிதனை குறிப்பு எழுதி

மஞ்சளொடு நீலமணி வர்ணம் கூட்டி
மரகதத்தின் நிறத்தினிலே காட்டைத் தீட்டி
பஞ்சுநிற வெண்மையிலே பழுக்கா சேர்த்து
பலாச்சுளையின் மேனிதனை புலிக்குப்பூசி
அஞ்சனத்துக் கோடுகளை அதன்மே லெழுதி
அம்பிறைபோல் கோரப்பல் வாயுள் காட்டி
வெஞ்சினத்தை விழிகளிலே விடம்போல் சேர்த்து
மலரிதழ்போல் வளைந்துநிமிர் நாவைத் தீட்டி

கள்ளர்களே மறைந்திருந்து குத்தும் வாள்போல்
கால்களிலே கூர்நகங்கள் கௌவத் தீட்டி

வெள்ளருவி எனப்பாயும் வீரம் காட்டி
விழிபிதுங்க, குழல் அவிழ, விதிர்ப்புத் தோன்ற
வில்வளைவு எனப்பெண்ணின் உடலைக்காட்டி
விசையற்ற அம்புகள்போல் கைகால் நீட்டி
விள்ளரிய மரணபயம் இதழ் விலக்க
விம்மிடுமார் தனில்பொங்கும் ரத்தம் தன்னை

செக்கரென நிறம்சேர்த்துத் தீட்டிப் பார்த்தான்.
திருப்தியினும் அவன்மனதைத் தீண்டவில்லை.
தக்கதென தணல்நிறத்தைப் பூசிப்பார்த்தான்.
சரியில்லை எனக்கண்டான். பெண்ணின் மார்பில்
எக்களியாய் வழிகின்ற இரத்தம் காட்ட
எந்தநிறம் பொருத்தமென எண்ணி எண்ணி
தக்கதெனத் தன்மார்பில் புதைத்தான் வாளை ;
தாவிற்று செங்குருதி தடவி வீழ்ந்தான்.

புதுவைநகர் மன்னவன்றன் பரிவாரங்கள்
புடைசூழ உதயத்தில் குகையடைந்து
ஒதுக்கோரம் விடாதபடி எழுதியுள்ள
ஓவியங்கள் பலநோக்கி உவகை மிஞ்ச,
வியப்புற்று, புலிச்சித்ரம் தன்னை நோக்கி
வினவினன் ஓவியனின் பெயரை. ஆங்கே
எதிர்நின்று முது கலைஞன், "வேந்தே! இதனை,
எழுதியவன் என் மைந்தன். ஆனால் என்ன ? "

என்றுரைத்து எரிமூட்ட மறைத்து வைத்த
இளம்கலைஞன் இரத்தஉடல் எடுத்துக் காட்டி
தன்விழிகள் கோடைமழை பொழிய விம்மி

"தனையா என்தவப்பயனே! கண்கள் திறப்பாய்!
மன்னனைப்பார்! மாட்டாயோ? கலைக்கு உயிரை
மரணத்தின் கையளித்தோய்! மகனே! மகனே!
இன்னிலமேல் இனிஎன்னை 'அப்பா' என்று
எவரழைப்பார்? சித்தன்னு, தமிழரேறே!"

என்றே பலவிதம் ஏங்கிக் கதறினுன்.
மன்னன் அவனது மாதுயர் கண்டு,
"மாண்டோர் அழுவதால் மறுபடி வருவரோ?
உள்ளம் தேறுக. உன்றன் மகனே
தமிழ்மொழி உளவரை தமிழகம் உளவரை
சித்திரக் கலைதான் செகமேல் உளவரை
குன்றாப் புகழைக்கொண்டு விட்டான்!
சித்தனன் என்ற சீர்த்திப் பெயரால்

உத்தமக் கலையின் வாசலொன்றிங்கே
அமைப்பேன். அதற்கு ஆசான் நீயே!
அற்புதக் கலைஞன் அங்கமே அன்பில்
வெந்தே கருக விரும்பேன். இவனை
இங்கே சமாதி யிட்டே யானும்
இறைஞ்சித் தொழுவேன்" என்று
உரைத்தான் தமிழால் உலகாள் வேந்தே.

## கனவு

ஆடி நடந்தேன் அசைந்
தாடி நடந்தேன் வனம்
நாடிமின்னோடு தெனும் கொடிப் பாதையில்
ஆடி நடந்தேன்.

செக்கச் சிவந்தது வானம்
செக்கச் சிவந்தது ஏழை
விக்கிவிடும் மூச்சில் வீசும் நெருப்பைப்போல்
செக்கச் சிவந்தது.

புட்கள் பறந்தன கூடிப்
புட்கள் பறந்தன நல்லோர்
உட்பகைக் கஞ்சியே ஓடும் அகந்தைப்போல்
புட்கள் பறந்தன.

இருளுங் கவிந்தது மைபோல்
இருளுங் கவிந்தது கல்விப்
பொருள் தேடார் நெஞ்சில் பொருந்தும் மருளைப் [போல்
இருளும் கவிந்தது.

கர்ஜனை ஓசை சிங்க
கர்ஜனை ஓசை தமிழ்
தர்மப் பயிர்காக்கும் தக்கோர்கள் சொல்லைப்போல்
கர்ஜனை ஓசை.

எண்ணம் உதித்தன பல
எண்ணம் உதித்தன நீல
வண்ணக் கடலின்மேல் மின்னும் அலைகள்போல்
எண்ணம் உதித்தன.

முட்கள் தைத்தது கூர்
முட்கள் தைத்தது நகர்
உட்புகும் யுவர்கள் உறும் நாகரிகம் போல்
முட்கள் தைத்தது.

ஆவென் றலறினேன் பயங்
தாவென் றலறினேன் கைம்மை
நோவிற்சிக்கி நெஞ்சம் நோவுங் குமரிபோல்
ஆவென் றலறினேன்.

இரத்தம் வழிந்தது காலில்
இரத்தம் வழிந்தது உழவர்
கருத்த விழியில் கசிந்தூறும் நீரைப்போல்
இரத்தம் வழிந்தது.

மூர்ச்சைய தானேன் சோர்ந்து
மூர்ச்சைய தானேன் நன
வோர்துளியின்றி உயிரற்ற உடலைப்போல்
மூர்ச்சைய தானேன்.

வானத்தை முட்டும் நீண்ட
வானத்தை முட்டும் பெருங்
கானகயானை கவின் தந்தத்தைக் கொண்டே

கட்டிய வீடு யாரோ
கட்டிய வீடு அதில்
பட்டப்பகற்போலொளி சிந்தும் வயிரத்தூண்,

வீட்டிற்கு முன்னே வண்ண
வீட்டிற்கு முன்னே கம்பன்
பாட்டின் சுவையாவும் பாவை உருக்கொண்டு

நின்றாள் ஒருத்தி நேரில்
நின்றாள் ஒருத்தி அவள்
தன்னுணர்ச்சி யாவும் கண்புயலில் வீச

அலைந்தது உள்ளம் சிதறி
அலைந்தது உள்ளம் ஒரு
நிலையின்றி ஓடும் நிறமற்ற காற்றைப்போல்.

காரை நிகர்க்கும் கருங்
காரை நிகர்க்கும் குழல்
சீரொடு கோதி பிறைதேக்கும் தோகைபோல்

அருகினில் வந்தாள் என்றன்
அருகினில் வந்தாள் தென்றல்
உருபெற்று வந்தாற்போல் ஒயிலுக்கு ஊற்றினள்

பேசினள் ஆகா! கொஞ்சிப்
பேசினள் ஆகா! வீணை
வாசிப்பு, குழலன்று! ஆசியா ஒளிபுத்தன்

நேசித்த சொல்லை மிக
நேசித்த சொல்லை. காந்தம்
ஊசிகொள் பான்மைபோல் உள்ளம் பறிபோக

சற்று நேரந்தான் சங்கை
சற்று நேரந்தான் பின்பு
உற்றிருப்போர் நோக்க உவகைப்புது வெள்ளம்

கூடிற்று ஒன்ருய்ப் பொங்கிக்
கூடிற்று ஒன்ருய் நதி
ஓடியே கடல்முத்தம் சூடிடும் பான்மைபோல்.

அந்தநல் வேளை இன்பம்
அந்தநல் வேளை "நான்
இந்த யிடம்வந்ததேது நீ யாரென்று

விள்ளுக நங்காய்! உண்மை
விள்ளுக நங்காய்! நெஞ்சம்
சல்லடைக் கண்ணுன சசிபட்ட இருளைப்போல்"

என்றே யிசைக்கப் புகல்
என்றே யிசைக்க அவள்
புன்முறுவல் செய்து கன்னித் தமிழில்,

"விள்ளுவேன் கேளாய் யாவும்
விள்ளுவேன் கேளாய் கானில்
முள் தைத்து நீ மூர்ச்சையாகிய போதினில்

வந்தேன் நானங்கே ஓடி
வந்தேன் நானங்கே வாழும்
அந்தரம் விட்டுன்னை காத்திட அன்பால்"

என்று புகன்றே உண்மை
என்று புகன்றே "தடை
ஒன்றுங் கூருதென்ற ஞேடுவா" என்ருள்.

ஊசியின் வழியே தைக்கும்
ஊசியின் வழியே மௌனம்
பேசியே பின்செல்லும் பேதை நூலைப்போல்.

நிழல்போல் தொடர நானே
நிழல்போல் தொடர வானின்
அழகியும் வழிகாட்டி அமைதியா யேகினள்.

தங்க மரங்கள் பசுந்
தங்க மரங்கள் அதில்
பொங்கும் புது நிலா போன்ற வாடாப்பூ.

படிக நீரோடை தூய
படிக நீரோடை ஞானி
வடிவினைப்போல் பாச மற்றிசை பாடியே

சென்றிடும் ஓடை பெருகிச்
சென்றிடும் ஓடை ஜீவன்
குன்றிடும் முன் செல்லும் குடிவாழ்க்கையைப்போல்.

கல்லும் முகர கருங்
கல்லும் முகர வாசம்
அள்ளித் தெளித்திடும் அம்போருக மீது

மின்னகை தவழ இதழில்
மின்னகை தவழ உயர்
அன்பே வடிவாயானந்த மதாய்க் குந்தி

ஒருவன் இருந்தான் காளை
ஒருவன் இருந்தான் வில்லின்
புருவத்தை நெரித்திமை பொருத்திய வண்ணமே.

உற்றே அவனைக் கூர்ந்து
உற்றே அவனை யானும்
சற்றே பார்த்து மூச்சு விட்ட சமயத்தில் ;

மாணிக்கத் தட்டில் நாக
மாணிக்கத் தட்டில் 'என்றன்
காணிக்கை யீதென்று' வானத்துத் தேவப்பெண்

பலவித மாக வர்ணம்
பலவித மாக சுடர்
இலகிடும் பாத்திரம் ஈரைந்ததனிலே

அமுதம் நிறைத்து திவ்ய
அமுதம் நிறைத்து 'தங்கள்
குமுதவாய் பருகிடக் கோரிக்கை' என்று

கொண்டு கொடுத்தாள் வேண்டிக்
கொண்டு கொடுத்தாள் ஜீவன்
உண்டில்லையோ என்று ஐயுட்டும் காளைக்கு.

கண்கள் மலர்ந்தே அருள்
கண்கள் மலர்ந்தே தனக்
குன்னக்கொடுத்ததை உற்று நோக்கிக் காளை :

"வானம தொன்று படர்
வானம் தொன்று அதில்
மீனினம் எண்ணில மெய்யிது மெய்யே

காற்றது ஒன்று குளிர்
காற்றது ஒன்று அது
எற்றுத் தழுவு மிடங்கள் கணக்கில்லை

சூரியன் ஒன்று செழுஞ்
சூரியன் ஒன்று அதில்
வீறிட்டெழும் சுடர் விண்ணுக் கடங்கா

கண்ணாடி ஒன்று ரசக்
கண்ணாடி ஒன்று அது
எண்ணற்ற முகங்காண இடந்தானே யீயும்

முகிலது ஒன்று மழை
முகிலது ஒன்று அதில்
நெகிழும் நீர்த்துளிகளோ நினைவில் அடங்கா

வீதியோ ஒன்று செல்லும்
வீதியோ ஒன்று அந்த
வீதிவழிச் செல்லும் மாந்தர் அனேகம் பேர்

மண்ணது ஒன்று களி
மண்ணது ஒன்று வேளான்
பண்ணிடும் பாண்டங்கள் பற்பல வாகும்!

நடிகை ஒருத்தி! நல்ல
நடிகை ஒருத்தி! அவள்
அடவுகள் காட்டுவ தாயிரங்கோடி!

வீணையே ஒன்று நாத
வீணையே ஒன்று அதில்
பாணர் பலர் பலகான மிசைப்பார்!

பாத்திரம் பத்து வர்ணப்
பாத்திரம் பத்து அமுது
மாத்திரம் ஒன்று மாதேநீ கொணர்ந்த மா

சூத்திரம் கண்டேன் அருஞ்
சூத்திரம் கண்டேன் இன்றே
ஆத்திரம் நீங்கிற்று அகிலத்தின் உயிர் யாவும்

ஒன்றென்று சொல்லும் தெய்வம்
ஒன்றென்று சொல்லும் உண்மை
இன்சுடர் காட்டி என் புன்னிருள் போக்கிட்ட

அம்மையே ! என்று சத்தி
அம்மையே !" என்று மூச்சை
இம்மென் றெடுக்க எழுந்ததோர் ஜோதியே !

விட்டில் விளக்கைச் சித்ர
விட்டில் விளக்கைக் கூடும்
சட்டத்தைப் போலத் தயக்கம தொன்றின்றி

கூடிக் கொண்டாளே அதில்
கூடிக் கொண்டாளே என்னை
நாடியே கூட்டிக் கொண்டேபோன நங்கை

விண்மீனைப் போலே சின்ன
விண்மீனைப் போலே இந்த
மண்மேல் விழுந்தேன் மருள் தெளிந்து !

ஆடி நடந்தேன்............

## வேளை வந்தது

பூமகள் கண்எனவே பூத்த மகதமதில்
காமக் கடலாடும் கணிகையர் தம்மரபில்,
வந்த புதுமலராம், வாசவ தத்தைஎன்பாள் ;
அந்தரத்து மேனகைபோல்ஆடும்தொழிலுடையாள் ;
அன்னவள் அன்புபெற, ஆளும் அரசரெலாம்
என்பும் உருகிநிற்க, ஏழை, இரந்துண்ணும்
பித்தன், உபகுப்தன் என்னும் பெயருடைய
புத்தபிக்ஷு பேரெழிலில் சித்தம் பறிகொடுத்தாள்.
கன்னிப் பருவமுற்ற கட்டழகி, காளையவன்
அன்பை அடைந்தின்பம் ஆரத் தழுவுதற்குச்
செய்த உபாயமெல்லாம் தீபத்தின் முன் இருள்போல்
பொய்பட்டுப் போக. புசிப்பில் கவனமின்றி
மேனி தளர்வடைந்து மெல்யாழ் இசை இழந்து
வானின் நிறங்காட்டும் வாரி எனவிழித்து ;
கூண்டுக் கிளியதுபோல் கார்கூடும் மாளிகையில்
நீண்ட நினைவுகளில் நெஞ்சதனை ஓடவிட்டாள்.
பாங்கியர்கள் பக்கமுற்றூர் ; 'உண்மை பக'ரென்றூர் :
ஏங்கிப் பெருமூச்சு விட்டே இதழ்துடிக்க,
"நெஞ்சமே நெஞ்சுடனே கொஞ்சுகின்ற வேளையிலே
மிஞ்சும் துயரதனில் மென்மையின்பம் ஒன்றுளது "
என்றே உரைத்தாள், இருளாடும் கண்ணழகி ;
வன்ன மிகுமாடிச் சன்னல் தனைத்திறந்தாள்.
நீல முகிலதனை நேராம் முடிப்பிக்ஷு,

சாலைவழியாகச் சாடும் மழைதனிலே
செவ்விய ஆடையிலே சேற்றின் துளிபாயக்
கவ்வும் குளிரதனில் கால்நோவ வந்திடுதல்
கண்டாள் விழிசிலிர்க்கக் கட்டும் கலை அவிழ
வண்டாய்ப் பறந்து மணிவாயில் வந்தணிகிப்
பிக்ஷுவென்று கூவினாள், பிக்ஷுவென்றாள் பின்னுமவள்
'பிக்ஷு!' என்றாள். யாவோர் பித்துப் பிடித்தாள்போல்.
பாம்பை மிதித்துப் பதறினாற் போல்துடித்துக்
காம்பனைய தோளுடைய கன்னியவளை நோக்கி,
என்னம்மா தாயே எனவே இளங்குயிலாள்
கன்னி கனிந்த கனிஇதழைத் தான்திறந்து,
"ஈர உடையுடனே ஏகுவதென் னேசுவாமி
ஈர உடைகளைவீர் என்வீ டடுத்திடுவீர்"
என்றே இசைத்திடலும் எல்லாம் தெரிந்தபிக்ஷு
குன்றும் கரைந்துருகும் அன்புக் குரலினிலே
"பச்சை படர்ந்தமரம் நாளையே பட்டுலரும்
இச்சை அறிபவர்யார்? ஈர உடைபுனைவேன்
வீட்டைத்தான் பார்க்க விருப்பம் அதிகமுண்டு.
நாட்டம் எனக்கின்னும் நன்றாய்த் தெரியவில்லை;
ஆயினும் வேளைவரும் அவ்வேளையில் வருவேன்
தாயினும் அன்புடையாய் தண்டம் வருகின்றேன்"
என்றே கடலலைதான் ஏதோ கரையிடத்தில்
விண்டே மறைவதுபோல் சென்றான் மழைதனிலே.
வேளைவரும் நாளைவரும் விண்ணின்பம் தேடிவரும்
பாளைச் சிரிப்புடனே பார்க்கவரு வான்பிக்ஷு
என்றே கணிகைமகள் எண்ணம் பலகொண்டு

பொன்னே யெனுமேனி பொங்கும் அழகு செய்தாள்
விண்ணில் இரவிமலர் விம்ம விரைந்துவரும்
கண்ணில் துயில்புகுமுன் காதற் கனவுவரும்
வட்ட முழுமதியம் வாரிதி பொங்கவரும்
கொட்டும் முரசதிரக் கோயில் விழவுவரும்
அன்புடைய பிக்ஷு மட்டும் ஆள வரவில்லை.
சென்றன நாட்கள் ; சிதைந்தன ஆண்டிரண்டு
தோகை அவள் ஆசை தோன்றி மறைகின்ற
மேகவான் விற்போல் மிளிர்ந்து மறைந்திடுமோ
என்னும் நினைவுகொண்டே ஏங்கிச் சருகாவாள்.
என்றாலும், 'சொன்னமொழி என்றும் தவறான்காண்
ஆகையால் வந்திடுவான் ; அன்பும் அடைந்திடுவாய்,
சோகம் விடு'எனவே சொல்வாள் மனந்தனக்கே.
தேன்கொண்ட பூவினையே தேடும் மதுகரம்போல்
மான்விழியாள் காதல் மயக்கேறி மானமின்றி
ஈசன் வசிக்குமிடம் என்றே அவள்மனைமுன்
வாசல் வழியாக வந்தான் ஒருசெல்வன்
வஞ்சி அவள் தாயாம் நச்சுக் குணக்கிழவி
பஞ்சு நிறத்தலையாள் பல்லில்லா வாய்திறந்து
கோடி பவுன்கொடுப்பான் கோட்டைத் தளபதிகாண்
கூடிக் கலத்தலின்றிக் கோதாய் ஒருமுத்தம்
தந்தால் அதுபோதும் என்றே தவிக்கின்றான்.
வந்துள்ளான் நம்முடைய வாயில் தனைத்தேடி
ஆலயத்தில் முன்னொருநாள் ஆவித் துடிப்பினைப்போல்
காலில் சதங்கை கொஞ்சக் கட்செவிபோ லேநெளிந்து

கைவழியே கண்செல்லக் கண்ணுற் சுவைகாட்டி
ஐயநுண் ணிடையாள் நீ அற்புதமாய் நட்டமிடப்
பார்த்தானும் அன்றுமுதல் பார்வைதனி லேஉன்றன்
நேர்த்தி வதனமலர் நின்றே சிரித்திடுமாம்
மாதாவாம் என்சொல்லை மானே மறுக்காதே
போதாகு முன்அவன்முன் போவாய் முகம்மினுக்கி"
என்றே பலவிதமாய் ஏழைக் கிழவிசொல்ல
மின்னிடை மாதரசி மேனிமுழு தும்பதறிக்
"கன்னிஎன்றன் கண்களினால் காதல் விளக்கேற்றி
முன்னம் ஒருவனுக்கு முத்தம் கொடுத்துவிட்டேன்
நீரி விடும்கோட்டை நேராம் பொருள்நாடி
ஊரிலுள்ள காமுகரை ஒன்றும் கருத்தில்லை
உள்ளம் விரும்பார்பால் ஓடியே கொஞ்சுவது
கொள்ளி யதனுடனே கொஞ்சும் குணமாகும்"
என்றே எதிர்உரைக்க ஈனக் கிழவியவள்
சென்றாள் தலையாடச் சேதிசொல்ல வாசலுக்கே.
தேசு மிகும்உடலைக் காசுக்கு வாங்கவரும்
மாசு நிறைந்தமக்கள் பாசம் தனக்கஞ்சி
நேசபிக்ஷுவைஎண்ணி நெஞ்சம் நெருப்பாகி
வாசவ தத்தையவள் வாழ்வில் வெறுப்புற்று
வையந் தனைமறந்து வாயிற் பலபிதற்றி
நையும் நடுஇரவில், நாதியில் லாஒருவன்
தேறாப் பெருநோயால் திண்டாடித் தேகமெலாம்
ஆறாகச் சீழ்வடிய அம்மா பசிஎனவே
கூவி அழைத்தக்குரல் கூர்அம்பு போற்பாய்ந்தே
ஆவி தனைப்பிளக்க ஐயோஎன இரங்கி

வாழைக் கனியுடனே வாச மிகும்பாலும்
ஏழை யவன்முன்னே இட்டுப் புசியென்ருள்.
தீப்பட்ட சுள்ளியெனத் தேய்ந்திருந்த கைவிரலால்
சாப்பிடக் கூடவில்லை, சன்னப் புழுக்களவன்
மேனிக் குழிப்புண்ணில் மின்னல் எனநெளிய
வானின் நிலா நுதலாள் காணும் தருணமதில்
'நேசன்பி க்ஷுக்கெனவே போற்றி நிறைத்த உடல்
நீசர் விழிசுடுதல் நீங்கிப் பிழைப்பதற்கு
நொய்ய அவன்போலே நோயை அடைந்திடுவேன் ;
தெய்வம்வழி காட்டும்'என்றே சித்தம் துணிந்துவிட்டாள்.
தோன்றி யதுமறைமுன் துள்ளும் சிலபுழுவைத்
தேன்குழல்போ லேயெடுத்துத் தின்ருள் திகைக்காமல்.
வஞ்சியவள் செய்கைகண்டு வாய்மூடி மெய்நடுங்கி
அஞ்சி அகன்ருனவ் வாதுலன்பை சாசமென்றே.
காதற் பசிதனக்குக் கண்ணீர் உணவென்று
போதனை செய்ததுவோ பொல்லா விதியதுதான் !
நாட்கள் சிலசெல்ல நங்கை உடல்மழுங்கக்
காட்சி யளித்ததங்கோ கன்னங் கருங்குட்டம் !
கூன்முதுகுத் தாயார் கொடுத்த மருந்துகளை
வீண்செய்தாள், உண்ணுமல் வேடிக்கை காட்டிநின்ருள்.
இந்து நிகர்முகத்தில் இருளே கவிந்திடவும்
சுந்தரந் தான்குறைந்தாள், சுற்றம் தனையிழந்தாள்.
ஊரார் அவளிடத்தில் ஊறிவரும் நோய்கண்டு
பாராமல் பார்த்துப் பரிகாசம் செய்தார்கள்.
தேய்பிறையே போலஅவள் தேகம் குறைந்ததனுல்

நாய்களும் அன்னவளை எள்ளி நகைகாட்டும் ;
கொத்துங் கருங்காகம் கூடிக் கழிப்புண்ணைக்
குத்திக் குருதிசெயும் ; கொள்வாள் மிகுவாதை ;
கார்காலம் முன்வேனில் என்னும் பருவமெலாம்
பார்மேவி அன்னவளைப் பார்த்து பயந்துசெலும் ;
பக்கம் இருந்தவளைப் பாலிக்க யாருமின்றித்
துக்க விழிநீர்தான் சொட்டக் களைப்புடனே
நாட்டினெல்லை தாண்டினுள் ; காட்டு மரத்தின்கீழ்க்
கோட்டான் என்விழிப்புக் கொண்டு குளிர்இரவில்
தூய மணிமஞ்சம் தோய்ந்த மலருடலாள்
பாயும் புழுதி படிந்த தரைக்கிடந்தாள்.
காற்றிற்கும் கார்முகிற்கும் காயும் ரவிதனக்கும்
ஊற்றிற்கும் அன்பதனை முன்னம் உரைத்தபுத்தன்
பாத மலர்நினைந்து பாரெங்கும் அன்புமதப்
போதந் தனைப்புரிந்து பொன்மகத நாடடைய
அவ்வழி யாகவரும் அன்பன் உபகுப்தன்
செவ்விய தாள்அவள்தன் தேகத்தில் பட்டிடற
நின்றுன் ; விழிகள் இருள்நீந்த நோக்கினுன் ;
அன்பு பெருக்கெடுப்ப ஆர்வக் குரலினிலே
" ஐயோ அபசாரம் " என்றே அவளை இரு
கையால் எடுத்திடலும் காத்திருந்த அக்கணிகை :
" இன்றே அடிகள் இணைமா மலர்விழிகட்
கென்றன் முகங்காணும் இச்சை பிறந்ததுவோ !
மாலை மயக்கினிலே முன்பு மழைதனிலே
வேளை வரும்வருவேன் என்றவேளை இதுவோ !

பிச்சை எடுத்துண்ணும் பேய்நான் தமதுள்ளம்
மெச்ச எதுதருவேன்? மேனி தனிலிருந்த
கட்டிளமை நீங்கக் கடுநோய் மிகக்கொண்டு
பட்டமரம் போலே பசையிழந்து போனேனே!
நாகத் தலையிருக்கும் நல்ல மணிபோல்என்
ஆகத்தி னுள்ளேநும் ஆசை ஒளிருதையோ!"
என்றே புகன்றிடலும், ஏதும் மனம்மறவா
அன்பு நிறைமுனிவன் அபலை மிடிகண்டே
கொண்ட உடைகிழித்துக் கோதை உடல்தனிலே
கண்ட கரும்புண்ணைக் கட்டுதற்கு முந்துங்கால்,
குட்டப் பிணிபிடித்த கோதை, "எனதுடலைத்
தொட்டால் நுமையுமிந்தத் தொற்றுநோய் பற்றிவிடும்
வேண்டாம், அகன்றிடுவீர்!" என்று விழிகடலாய்
மூண்ட துயராலே மூர்ச்சை அடைந்துவிட்டாள்.
மோகக் கணிகையினை மூர்ச்சைதெளித் தேஎழுப்பி
மேகத் திடைவந்த வெண்ணிலா வைக்காட்டி,
"கண்டிடுவாய் விண்ணையங்கே; கங்குற் கருங்குட்டம்
கொண்டே நிலாவென்னும் சீழைக் கொடுப்பதுவும்,
புண்ணில் நெளியும் புழுப்போலப் பல்கோடி
விண்மீன் துடிதுடித்து வேதனை கொள்வதுவும்
நன்றாகப் பார்த்தறிவாய்; நாடெல்லாம் ஈதேபோல்
புன்னோயில் ஆழ்ந்திருக்கப் பூவாய் வருந்துவதென்?
எல்லாப் பிணிகளையும் இல்லா தொழிப்பதற்கு
நல்லோன் நமதுபிரான் புத்தன் அருளொளியே
தக்க மருந்தாகும்; சான்றோன் அவன் சரணம்
எக்காலும் போற்றுவதே இன்பமிதை நம்புகநீ"
என்றே அவள்செவியில் ஏதோ புகன்றிடலும்,
புன்னோய் அகன்றுமங்கை பூர்ணிமை போல்நின்றாள்.

" மேனி யழகினிலும் மேன்மையுறும் உள்ளழகை
யானிங் கணையநினைந் தாசையுடன் வந்தேன்காண் ;
தர்ம வெளியினிலே சற்றும் பயமின்றி
நிர் வாணம் கொண்டேநாம் நித்தம் சுகித்திருப்போம்.
வாராய் " எனப்பிக்ஷு சோலை வழிநடக்கத்
தீராத நோய்தீர்ந்தாள், சென்றாள் அவன்பின்பே.
வேளைவந்த தென்னவே விண்ணில் இருள்நீக்கிக்
காலை மலர்ச்சியுடன் வந்தான் கதிரவனே !

# தமிழ்க்கொடி

வில்லின் கொடியிதுவே! தமிழர்
வீரக் கொடியிதுவே! வான்
வில்லும் தலை வணங்கும் சேரர்
வெற்றிக் கொடியிதுவே!

புலியின் கொடி யிதுவே! தமிழர்
போரின் கொடியிதுவே! அம்
புலியும் தலை வணங்கும் சோழர்
புகழின் கொடி யிதுவே!

மீனின் கொடி யிதுவே! தமிழர்
மீளிக் கொடி யிதுவே விண்
மீனும் தலை வணங்கும் பாண்டியர்
மிட்டா கொடி யிதுவே!

மலைநிகர் தோள்வலிகொள் தமிழர்
மாண்புக் கொடி யிதுவே! இமய
மலையதன் உச்சியிலே பறந்த
மாழைக் கொடி யிதுவே!

சிறையி லடைத்தாலும் தமிழர்
செல்வம் பறித்தாலும் குண்டு
உறைய மடித்தாலும் இதனை
உண்மை எனக் காப்போம்!

## எது எழில்

சோதி பெருக்கியே மோதிருள் துடைக்கும்
சூரியன் தான் எழிலா ?

வீதி பெறுக்கிடும் தோட்டியின் கையினில்
வீற்றிருப்ப தெழிலா ?

நானிலத் தழுக்கை வாரியில் வெளுக்கும்
நதியது தான் எழிலா ?

மானிடர் கறையுடை மதிபோல் சலவைசெய்
வண்ணானின் கை எழிலா ?

சுற்றும் இரவினில் தூக்க விழிகாட்டும்
சொப்பனம் தான் எழிலா ?

குற்றமின்றி மண்ணைக் கோதிக் கலயம்செய்
குயவனின் கை எழிலா ?

பொறிகள் கலங்கிட புதுமின் இடி காட்டி
பொழியும் மழை எழிலா ?

தறியினில் நூலிட்டு சகத்தின் மானம் காக்கும்
சாலியன் கை எழிலா ?

பிறருக் குதவிடும் பெற்றியுள்ள நெஞ்சம்
பேசரும் பேரெழிலாம் !

இறவாத அவ்வெழில் புரக்கும் தொழிலாளர் கை
இருப்பது புதுமையடா !

## சின்னஞ் சிட்டு

நெல்மூக்கு; கடுகுக்கண்; காற்றில் நீந்தும்
நிலவெனவே பஞ்சுடலம்; நெஞ்சம் தன்னில்
வெள்ளம்போல் புத்துணர்ச்சி; விம்மும் மூச்சில்
விடுதலையின் மென்கீதம்; விண்ணும் மண்ணும்
கொள்ளைகொள் தனிக்காதல் கொழுந் திதயம்;
கொத்தின்றிக் கூடுகட்டி வாழும் கொற்றம்
கள்ளர்தம் பயம்மூட்டும் செல்வம் காணு
கலைஞானம் கண்டதடா, சின்னஞ் சிட்டு!

கணைஎனவே கட்டுகளைத் துளைத்தே தூய
கதிரவனின் ஒளிதனிலே இறக்கை நனைத்து
இணையுடனே சுதந்திரத்தின் ஏற்றம் நோக்கி
எவ்விடத்தும் மனம்போல ஏகிச் சுற்றி
பணம்படைத்தோன் இவன் ஏழை என்றே பிரிக்கும்
பார்மக்கள் அறிவதனைப் பரிக சித்து
மணமிழையும் தென்றலிலே ஊஞ்சலாடும்
மாகவிதை வடிவமடா சின்னஞ் சிட்டு.

# அறுவடை

நெல்லென்ற பொன்பற்கள் தன்னைக் காட்டி
நிலவூற நகைகாட்டும் பயிரை நிலமேல்
கொல்கின்ற தொழில்கொண்டேன், அல்லில் பூக்கும்
கோலமிகும் உடுஅறுக்கக் குறுகும் ரவிபோல்.

நீள்நெற்றி துளிர்த்திட்ட வேர்வைத் துளிகள்
நெல்லுள்ளே அரிசிஎன நிற்கு தையா!
தோள்விம்மக் கதிரறுக்கத் துணிவு கொண்டேன்
சுடும் கண்ணீர் துணித்தெறியும்கால வாள்போல்.

கொலைகார னாகிவிட்டேன்; உண்மை! பெற்ற
குழந்தைகளைக் கொல்லுகிறேன். உண்மை, உண்மை!
தலத்தோரே, தூக்கிலெனை யிடுவீர். ஆனால்,
சாகடிக்கும் பசிதன்னைச் சமைத்தோன் முன்னே!

உயிர்போகும் வேளையிலே மனிதன், உள்ள
உண்மைதனைச் சொல்லிடுவான் அன்றோ? ஓர்நாள்
வெயிலாடும் தேன்மலரைக் கொய்து சாற்றி
விளக்கேற்றிக் கற்சிலையின் விருப்பைப் பெற்றேன்!

## உயிர் பெற்ற கல்

சிற்பக் கலைதனிலே—தமிழர்
செய்த அருஞ் செயலை
கற்பனை செய்துவிட்டால்—நெஞ்சினில்
கனல் மணக்குதடா !

மாமல்ல புரத்திலே—உயிரில்
மலர்ந்த சொப்பனத்தை
பூமகள் மேனியிலே—பூண்டதோர்
புதுமை கண்டிடடா !

சோழ நகரினிலே—நிழலை
துஞ்ச விடாதோங்கும்
வாழையின் பூவனைய—கோபுர
வாழ்வினைப் பார்த்திடடா !

தாயின் தமிழ்காத்த — பாண்டிய
தார்வேந் தரின் மனையில்
நாயக மன்னர்களே — புனைந்த
நாடகம் பார்த்திடடா !

சித்தன்ன வாசலிலே — கவிதை
தேங்கி நகைகாட்டும்
உத்தமக் கல்வடிவை — தமிழா
ஊன்றியே பார்த்திடடா !

தில்லை வெளியினிலே — நடனம்
செய்யும் திருவருளை
கல்லில் படம்பதித்த — தமிழர்
கைத்திறம் கண்டிடடா!

பேரூர்ப் பதிதனில் — உளத்தில்
பேரின்பம் மூட்டிடவே
சீரூர்ந் தோர்சமைத்த — சிலையில்
சிவனைப் பார்த்திடடா!

# தமிழிசை

தென்றலில் உள்ளக் குளுமையும்
தேனிலே யுள்ள இனிமையும்
மின்னலில் உள்ள உணர்ச்சியும்
மேன்மைத் தமிழிசைப் பெற்றதே !

குழந்தை மழலையின் இன்பமும்
குளிரும் மதியின் மயக்கமும்
அழலின் தூயதாம் தன்மையும்
ஆய்ந்தத் தமிழிசைப் பெற்றதே !

காயைக் கனிசெயும் காலமும்
கவிதைக் கடலதன் ஆழமும்
மாயை தவிர்க்கும் ஞானமும்
மதுரத் தமிழிசைப் பெற்றதே !

ஓம் என்னும் ஒலியில் மலர்ந்திடும்
உண்மைப் பொருளை உலகமேல்
காம்பெனத் தாங்கிடும் சக்தியும்
கன்னித் தமிழிசைப் பெற்றதே !

# காதல் பாதை

கடல் நீலம் வான் நெஞ்சில்
கமழுகின்ற காலம்
கவின் மலரில் தேன் வந்து
களிப்பெய்தும் வேளை
அடர்கானில் சூழ்ந்திருக்கும்
அமைதி நிகர் சோலை,
ஆச்சரியம் கண்மலர்ந்து
அமைத்த கனப்பொய்கை
அருகினிலே கருக்கிருளில்
அழகு காதல் பாதை !

சந்திரிகை தானுருக்கி
தாளப்பொடி தூவி
தகதகத்த செக்கர் நிழல்
தன்னுடனே கூட்டி
சிந்தனைகள் தனை நெய்து
செய்த ஒரு கிளையில்
தென்றலிலே திருவிளக்கின்
சிறகடித்து பாடும்
திறமையதன் அருகினிலே
செழும் காதல் பாதை !

நட்சத்திர வண்டினங்கள்
நனவின் அனல் மொய்க்கும்

நம பயத்தின் புதையலினை
ஞானப் பேய் காக்கும்
உட்கசிந்த தாயுள்ளம்
ஒளி ஊசலாடும்
உன்மத்தம் சிசு மழலை
உட்பொருளைக் கூடும்
உணர்ச்சியதன் அருகினிலே
உயர் காதல் பாதை !

# தனிமையும் இனிமையும்

சோகத்தில் தோய்ந்தவான் குடையின் கீழே
சுடர்க் கவிதை தனியிருந்தாள் அந்த வேளை
மோகத்தின் முத்துமுடி போன்ற நிலவே
மொய்த்ததுவே கலை வண்டாய் இருளாம்பூவை.

# நெல்லுக் குத்து

மூச்சு விசிறப்பொன் நெல்லுக்குத்தி — அதில்
முத்துப்போல் அரிசி தானெடுப்போம்
ஆச்சுது குங்கும அந்திப்போது — கொஞ்சம்
அழுத்தியே போடடி உலக்கைதன்னை

கண்ணிலே மொய்ப்பது கொசுவல்லடி — அது
காளைக்கு ஏற்ற தவிட்டுப்பொறி
விண்ணிலே கேட்கும் இடிச்சத்தமே — கண்டு
வெட்கவே போடடி உலக்கைதன்னை

நாட்டுக் கெல்லாம் உணவளிக்கும் — தமிழ்
நாட்டுப்புறப் பெண்கள் நம்முடைய
வீட்டின் இதயத் துடிப்பெனவே — எழில்
விம்மவே போடடி உலக்கைதன்னை

# காதலியின் ஏக்கம்

கண்ணால் பேசிப்பேசி — இன்பக்
காதல் தந்த கண்ணன்
இன்னமும் வந்திடக் காணேன் — யான்
என்ன செய்வேன் பாங்கி ?

வேற்றுமுகம் காணுதிருந்தேன் — அவன்
வேணுகானம் கேட்டு மறந்தேன்
காற்றது போலவே மறைந்தான் — அந்த
கள்வன் எப்போ வருவானோ ?

இரவு நேரமும் ஆச்சு — ஊர்
இறைச்ச லடங்கிப் போச்சு
விரல்தொடா வீணைபோலே — நான்
விழிக்கின்றேனே பாங்கி !

வண்டுதொடா புதுமலர்யான் — தனி
வதங்கி வாடலாமோ ?
தண்மதி வெண்தணலாக — எனை
தகிக்கின்றதே பாங்கி !

சுருட்டி வையடி பாயை — அணை
சுடர்செயும் தீபமதனை
இருட்டிலாகிலும் அவனின் — நிறம்
ஏழை நெஞ்சத்தி லுலாவட்டும் !

# குழந்தை

ஒட்டும் இரண்டுளத்தின்
உவகைக் கனவினிலே
சொட்டும் தேன் சுவையிற்
தோய்ந்த சிறுமலரே !

துள்ளும் இரண்டலையின்
சோதிச் சுருதியிலே
வெள்ளி முளைப்பாக
விளைந்த இளம்பொழுதே !

கண்ணில் விண் வளைவு
கலந்த கவர்ச்சியிலே
அண்டம் அளக்கவந்த
அமுத இளம் பிறையே !

எச்சல் இலாதமொழி
இதயம் தழுவையிலே
அச்சமிலாது வந்த
அழகின் சிறுகவியே !

## ' தப்பிப் பிழைத்தவன் '

உதிர்ந்த மலர் போல—மக்கள்
உறக்கத் தாழ்ந்திருக்க
எதிர் வீட்டுச் சேவல் — எழு ! எழு !
என்றே குரல் கொடுக்க

2

கழுதையின் முன் முகம் போல் — இரவு
காட்டும் உஷை ஒளியில்
அழுக்குத் துணி எடுத்து — வண்ணான்
ஆற்றங் கரையடைந்தான்.

3

கறுத்த மழை மேகம் — இடியைக்
கலந்துமின் காட்டுதல் போல்
முறுக்குத் துணிகளையே — கல்லின்
முத்திட வெண்மைசெய்தான்.

4

பவளக் கதிர் மறைய — வானில்
பளிச்சிடும் தாரகை போல்
துவைத்த துணிகளெல்லாம் — தண்ணீர்
சொட்ட பிழிந்தெடுத்தான்

5

வெண்முகில் துண்டுகள் போல் — உடைகளை
வெய்யிலில் காய வைத்து
தண்ணிழல் தந்து நிற்கும் — வேப்பந்
தருவின் அடி அமர்ந்தான்.

6

" ஊரார் அழுங்குடைய — வெளுக்க
உழமண் கண்டவனே !
மாராத உன் வினையை—வெளுக்கும்
மருந்தைக் கண்டதுண்டோ ? "

7

என்று சிறு குரலில் — தென்றலை
இயம்பி மறைந்திட
பின்னும் முனும் பார்த்து — வண்ணான்
பேய் போல் விழிக்கையிலே

8

நொச்சிப் புதர் தாண்டி — பிறை நிகர்
நுதலில் சிவப்பொளிர
"மச்சான் ! " எனக் கூவி — அவனின்
மனைவி கூழ் கொணர்ந்தாள் !

# எழுத்தாளன்

நெருப்பில் குளித்திட மென் மேலும் — உயர்
நிலவே காட்டிடும் பொன் எனவே
உருக்கும் வறுமையில் மூழ்கிடினும் — ரவி
ஒளிபோல் மதிகொள் எழுத்தாளன்

தோட்டி முதல் தொண்டை மான் வரையில் — அவன்
சொல்லாம் குழந்தையின் பொம்மைகளாம்
காட்டுத் தீ போலும் புரட்சி செய்வான் — வான்
கார்முகில் போலும் கருணை செய்வான்

மன்னன் புனைமுடி செங்கோலும் — அவன்
மைகூ டெழுதுகோற் கீடாமோ ?
தன்னல மென்பது சற்று மில்லான் — சூர்ய
சந்திரர் போலப் பணி புரிவான்

இரவு தெளித்திடும் நட்சத்திரம் — மது
இறைத்திடும் வசந்தப் பொன் மலர்கள்
கரவு நினையாது பாயும் நதி—ஒரு
கற்பனை யாளன் எழுத்தல்லவோ ?

கதிரவன் சுடர்செலா இடத்தினிலும் — அவன்
கருத்து சென்று வந்து கதைகள் சொலும்
மதிமயங்கும் இந்த மானிலத்தில் — அவன்
மனமது தாயினும் பெரியதன்றோ ?

வர்ணத்தில் தீட்டொணு சித்திரத்தை — சிறு
வார்த்தையில் தீட்டிடும் வல்லவனும்
சொர்க்கமும் தேடிடும் அன்னவனே — எனில்
'தொட்டாச் சிணுங்கி' எழுத்தாளன் !

# வசந்தம்

வந்தது வசந்தம்! வந்தது வசந்தம்!
வானக் கதிரொளி மாநில மங்கையின்
சிந்தையைக்கிளறி சிலிர்க்கச் செய்திட
எண்ணம் விழித்து கண்கொட்டி நகைக்க
வந்தது வசந்தம்! வந்தது வசந்தம்!
உள்ளங் கொதித்து உணர்ச்சி வெடித்து
உலகம் சிதறிய ரத்தத் துளிகள்
கள்ளவிழ் ரோஜா! கண்ணீர் சொட்டுகள்
கவின்மிகு முல்லை! காதலைத்தேடி
வந்தது வசந்தம்! வந்தது வசந்தம்!
மாமரம் செந்தளிர் நாவை நீட்டிட
மலர்கள் பூத்து வியந்து நோக்கிட
காமனின் சரம்போல் கோகிலம் கூவிட
கந்தம் சுமந்து தென்றல் தள்ளாட
வந்தது வசந்தம்! வந்தது வசந்தம்!
இன்பக் காவியம் இயற்கை ஏட்டில்
எழிலுறக் காணுது மலர் எழுத்தினுல்
அன்பர் கூடுவோம் ஆழ்ந்துபடிக்க
அற்புத பட்டாம் பூச்சி விளக்கொடு
வந்தது வசந்தம்! வந்தது வசந்தம்!
மகுடி ஓசையில் மயங்கும் பாம்பென
மனது சொக்கினர் மங்கையர் காளைகள்
புகுந்தது வண்டினம் புதுப் புது தேன்மலர்
பூண்டது இயற்கை எழிலின் போர்வை
வந்தது வசந்தம்! வாழ்ந்தது காதல்!

# முறையீடு

முல்லை மொட்டெனவே நானிருந்தேன் — அவர்
மொய்த்திடும் தென்றல தாகிவந்து
சொல்லாமலென்னவோ சொன்னூரடி — என்றன்
தூக்கம் கலைந்திட மெய்சிலிர்த்தேன் !

மேகச் சிதறலாய் நானிருந்தேன் — அவர்
மின்னூகி புன்னகைத் தூவிவிட்டார்
மோக இடிகள்நெஞ் சுட்குமுற — என்றன்
தேகங் கரைந்து மழையானேன் !

துள்ளும் அருவியாய் நானிருந்தேன் — அவர்
சூழலை யாகிஎன் மேனிதொட்டார்
உள்ளம் குளுமையி லூறிடவே — தினம்
ஓடுகிறே னெங்குந் தேடுகிறேன் !

# அவள்

காமன் பொட்டிடச் சாந்தும்
கங்குல் தங்க யிடமும்
களி கொண்டியும் வட்ட விழியினள்

தாமரை மலர்க்குத் தேனும்
தமிழ் தனக்குச் சுவையும்
தகை கொண்டியுந் தென்றல் மொழியினள்

சிசுவின் மனதில் தூய்மை
சிதறிய மீனிற் சோபை
திறங் கொண்டியும் முல்லை நகையினள்

குருடன் கண்ணிலேயிருள்
குமுறுழிக்குப் பசுமை
குணங் கொண்டியும் கொண்டற் சிகையினள்

மயில் தோகையில் வண்ணம்
வானவில்லில் காட்சி
மனங் கொண்டியும் வர்ண உடையினள்

புயல் பின் அமைதி வர
பூவின் மணமும் வர
புகல் கொண்டியும் கங்கை நடையினள்

கவர்ச்சி தனக்குத் தாகம்
கலசத்திற்கு மகிமை
கவின் கொண்டியும் மொட்டுத் தனத்தினள்

பவச்செய்கையிற் றுறவு
பாட்டதனிற் பொருளாய்
பணி கொண்டியும் சத்வ குணத்தினள்.

## என்ன ?

### விண்மீன்

ஒளி சுருக்கி விழி மறைத்து
உதயச் சுடரிலே — என்றன்
உருபுதைக்க உள்ளமதிலே ஊறுவதென்ன ?

### சூரியன்

பலமிழந்து பொலிவுமங்கி
பதும மலரிலே — என்றன்
பாசந்தங்க உள்ளமதிலே பாடுவதென்ன ?

### தாமரை

மணந் தெளித்து இதழ் கொடுத்து
மதுகரத்தின்பால் — என்றன்
மானம் விற்க உள்ளமதிலே மலருவதென்ன ?

### வண்டு

மதுகொடுத்து உடல்களைத்து
மரத்தில் கூடிட — என்றன்
மாண்பைத்தோற்க உள்ளமதிலே விம்முவதென்ன ?

### மரம்

மழை பொறுத்து வேர் புதைத்து
மண்ணடியிலே — என்றன்
மௌனஞ் சிந்த உள்ளமதிலே மொழிவதுமென்ன ?

## மண்

மலை சுமக்க கனல் சகிக்க
மக்கட் கூட்டமே — என்றன்
மதிவெறுக்க உள்ளமதிலே கொதிப்பதுமென்ன ?

## மக்கள்

உணவளிக்க பொருள் கொடுக்க
ஊக்கிடும் உயிரே — எங்கள்
உறவில் வெட்க உள்ளமதிலே ஒளிருவதென்ன ?

## நடிகன்

அரங்கமென்னும் நிகரில் மலரில் — சுவை
யாகியமைந்திட்ட அற்புதத் தேன்
பாரதமென்றும் பரிதியின் சுடர் — எங்கும்
பாய உதவிடும் மட்டற்ற வான் !

பச்சோந்தி போல நொடி ஒன்றிலே — பல
பாவங்கள் காட்டிடும் ஜாலக்காரன்
இச்செகமாந்தர் புலன்களையே — நன்று
ஈர்த்திடும் உன்னதமானச் சோரன் !

கண்ணுக்கு நேர் செக ஆட்டமதை — நன்று
காட்டும் கலைரசக் கண்ணாடியே !
எண்ணத் துடிப்புகள் தன்னைக் காண — பெரும்
ரகசியமாகிய உன் நாடியே !

கவர்ச்சியே என்றனையீன்ற அன்னை — உயர்
கருத்ததே என்றனை காத்த தந்தை
தவறான வார்த்தை நான் சாற்றுவேனோ — என்றன்
தனியாசாக்ஷியாம் உலக சிந்தை !

•

# பூவோ மலர்ந்தது?

கனிகொண்டத் தழைமரம் நுழைந்தது குளிர்தென்றல்
கவின் ஓசை கேட்டதென் காது — தண்டைக்
காலோசைக் கேட்பதும் யாது ?

காரிருள் தனைக்கீறி உமிழ்ந்தது கதிர் விண்மீன்
காட்சியை யான்கண்ட வேளை — அங்கே
காண்பதென் ஜிகினாச் சேலை ?

முத்து வெடித்தாற்போல் முல்லை விழித்தது
மொய்த்தது என் விழிக்கோணம் — பொங்கி
மூள்வதென்ன நகைவாணம் ?

நெருப்புக் குரல் குயில் உருக்கிவார்த்தது யிசை
நினைவினிற் புகுந்ததென் மூச்சு — செவியில்
நின்றொலிப்பதென்ன பேச்சு ?

மலர்களுதிர எங்கும் மதுரசம் சொட்டிற்று
மண் ஊறி வீசிற்று வாசம் — என்றன்
மனம் நனைத்ததெந்தப் பாசம் ?

நிலவிற் தோய்ந்த யிருள் பகலின் கைக் கோத்தது
நித்திரை கண்ணிலுலர்ந்தது — வானின்
நிழல் நீரில் பூவோ மலர்ந்தது ?

## பிச்சைக்காரர் ?

மழை இளைப்பாரிட குட்டையுண்டு—கொடும்
மனதிளைப்பாரிட எண்ணமுண்டு
அழல் இளைப்பாரிட நீருமுண்டு—எங்கள்
ஆசையிளைப்பார உண்டோ இடம் ?

பாம்பிளைப்பாரிட புற்றுமுண்டு—புள்
பறந்திளைப்பாரிட கூடுமுண்டு
வேம்பிளைப்பாரிட காகமுண்டு—எங்கள்
வேட்கை யிளைப்பார உண்டோ யிடம் ?

நதியிளைப்பாரிட ஆழியுண்டு—கொடும்
நஞ்சிளைப்பார மருந்துமுண்டு
கதிரிளைப்வார இராவுமுண்டு—எங்கள்
கவலை யிளைப்பார உண்டோ யிடம் ?

கண்ணிளைப்பாரிட தூக்கமுண்டு—அற்ப
கழுதை யிளைப்பாரத் துறையுமுண்டு
பண்ணிளைப்பாரிட தாளமுண்டு—எங்கள்
பசியிளைப்பாரிட உண்டோ யிடம் ?

•

# இன்று பிறவாயோ?

அன்று பிறந்தனையே—அன்பு
அமுதம் கொணர்ந்தனையே
இன்று பிறவாயோ—புண்ய
இந்திய நாட்டினிலே?

ஆட்டின் துயர் கண்டு—பலிக்கு
ஆளாக நின்றனையே
கூட்டின் கிளி போலே—அடிமை
கொண்டு துடிக்கின்றோம்!

மலரின் வாட்டம் கண்டு—அரச
வாழ்வைத் துறந்தனையே
உலகம் உடையுதையே—கண்ணீர்
உததி பொங்குதையே!

பஞ்சமும் நோயுமென—மரணம்
பாரை அழிக்குதையே!
அஞ்சே லென வருவாய்—புத்தா
அருண ஒளியெனவே.

## சூரிய காந்தி

மஞ்சளை முகத்தில் பூசினேன்—ரவி
மாணிக்கக் குங்குமப் பொட்டிட்டான்!
அஞ்சனம் கண்ணுக்கு வேண்டினேன்—அவன்
அந்தோ இருளை வழங்கினன்!

## மாயா சாலம்

வீழ்ந்த பனித் துளியில்—மலர்மொட்டு
வெடிக்கும் காட்சியினில்
சூழ்ந்த குண்டு பாய்ந்த—வீரனின்
துளைத்த தோள் கண்டேன்!

கனலுங் கதிர் வானில்—செக்கரைக்
காட்டி மறைகையிலே
அனலே பிடித்த கப்பல்—கடலில்
அமிழும் காட்சி கண்டேன்!

சித்தம் மகிழச் செய்யும்—பலவித
சிங்காரக் காட்சியெலாம்
யுத்த வடிவு பெற்றே—எனது
உள்ளம் உலுக்குதையோ!

மண்கொளும் ஆசையினல்—உலகே
மயான மார்ச்சுதையோ!
கண்இருந் தால் காலன்—இதனைக்
கண்டு சகிப்பானே?

# கலைத்தேவி

அலைமோதும் நீலமணிப் பொய்கை யதனின்
ஆவிஎனும் வெண்மலரின் அருக மர்ந்து
கலைத்தேவி திருவடியைக் காண வேண்டி,
கற்பனையைத் தூதுவிட்டுக் காத்தி ருந்தேன்.

2

விண்என்ற வாவியிலே விழித்த மதிமேல்;
வெண்முகிலாம் துகிலணிந்து; தென்றல் வீணை
பண்சொல்ல; உஷை வொளியில் வந்தாள், தூய
படிகநிற பால்வதனம் பளப ளக்க!

3

முத்தை நிகர்ப் பனித்துளியில் முறுவல் செய்து,
முளரிநிகர் அங்கையால் அபயங் காட்டி,
“கத்துகுயில் நிகர்க்கவிஞா, என்றன் உண்மைக்
கவின்வடிவம் காட்டுகிறேன் காண்க!” என்றே

4

விம்முமலைத் தோள்குலுங்க பழனந் திறுத்தும்
வேளாளர் நுதற்சிந்தும் வேர்வை காட்டி
எம்வடிவம் இதுவேயாம்! உழைப்போர் செய்கை
எதினிலுமே யான் ஒளிர்வேன்.” என மறைந்தாள்

5

பட்டினியை, கவலைகளை பருவத் தீந்தாள் ;
பாரதுதான் பரிகசிக்க வைத்தாள் ; எனினும்,
கட்டிசுவைத் தமிழ் மொழியால் அவளை துதிப்பேன்
காரணமோ ? அவள் எனக்கு கவிதை தந்தாள் !

6

தொட்டுணர்த்த முடியாத ஜோதி அறிவில்
தோயவைத்தாள். அவள் செய்த நன்றி சொன்னல்,
கட்டுடைய மாந்தருக்கு கட்டுக் கதையாய்
கனவாகத் தோன்றுவதும் உண்மை கண்டீர் !

# புதிய முரசு!

## 1

புத்தாண்டு மலர்ந்த தென கொட்டுமுரசு
போர்விலக இடி எனவே கொட்டு முரசு
சத்தானத் தமிழ்மகனே! கொட்டு முரசு
தலை நிமிர்ந்து அலைகடல்போல் கொட்டு முரசு
சுத்தான்ம நிலைபெறுக கொட்டு முரசு
'சுதந்திரமே பிறப்புரிமை' கொட்டு முரசு
எத்திக்கும் எதிரொலிக்க கொட்டு முரசு
இன்பமெல்லாம் பொங்கிடவே கொட்டு முரசு

## 2

ஏழைஇலை மோழஇலை கொட்டு முரசு
எல்லோரும் சமமெனவே கொட்டு முரசு
வாழும் வகை அன்பெனவே கொட்டு முரசு
'வையமது பொதுவுடமை' கொட்டு முரசு
தாழுவது இல்லை என கொட்டு முரசு
சத்தியத்தின் பெயராலே கொட்டு முரசு
சூழும் துயர் நீங்கிடவே கொட்டு முரசு
தொத்தடிமைத் தளைஒடிய கொட்டு முரசு!

# கலைஞன்!

எழுத்தினிலே இனிமை மெருகு ஏற
இதயத்தின் உணர்ச்சி யதில் சீற
வழுத்தும் கருத்தினில் மனது மாற
வரைந்திடுக வையம் கடைத் தேற

2

ஏழை மக்கள் அநுபவிக்கும் பாடு
இலக்கியத்தில் பிணைக்கும் தொழில் நாடு
பீழைகளை அச்சம் விட்டு சாடு
பெற்ற தமிழ் நாட்டினைக் கொண்டாடு

3

நீதி எனும் திராசினில் நில்லு
நேர்மையினால் நெஞ்சழுத்தம் கொள்ளு
சாதி சமயங்களையே தள்ளு
சரிசமம் எவரும் என்று சொல்லு

4

வீரனது வெட்டுக் கத்தி தன்னை
வெல்லும் வழிகாட்டும் பேனா. உன்னை
ஆரமுதா யாக்கி இன்பக் கண்ணை
அலங்கரிப்பாய் அழிவிலாத விண்ணை

5

தவறிலாது காணும் சுகம் யாதும்
சத்தியமே வலிய வந்து ஓதும்
கவலை எனும் அலைஉனையேன் மோதும்?
கலைஞன் எனும் பெயரதுவே போதும்!

# கன்னியாகுமரி

கவிதைத் தமிழ்க்குமரி — முத்துக்
 கடலுடை கொள்குமரி
சிவனார் மனங்குளிர — காதல்
 தேக்கும் இளங்குமரி

அந்தி வர்ணக்குழம்பை — புவியில்
 அள்ளித் தருங்குமரி
சிந்தை களிபாய — குளிர்ந்த
 தென்றல் மொழிகுமரி

கால விழிகளிலே — தீபக்
 கவினென ஒளிர்குமரி
நீலவான் மதிக்குடைக்கீழ் — தவம்
 நிகழ்த்தும் அருங்குமரி

ஊழி அலைகளிலே — நடனம்
 உற்ற கலைக்குமரி
வாழி தினம்வாழி — இளமை
 வற்றா கன்யாகுமரி.

•

# செங்கொடி

காலைச் செழுஞ்சுடரில் — மாலையில்
கவியும் செக்கரினில்
சீலத் தொழிலாளர் — ஏந்திடும்
செங்கொடி ஓங்குதுபார்!

அத்தி மீது பாயும் — வீரஞ்சேர்
அரியின் பிடறியிலே
சித்தங் கலங்காத — தொழிலாளர்
செங்கொடி ஓங்குதுபார்!

கத்தி கட்டிபாயும் — சேவலின்
கவின்மிகு கொண்டையிலே
செத்தவர்க் குயிரளிக்கும் — தொழிலாளர்
செங்கொடி ஓங்குதுபார்!

குருதிச் சகதியிலே — இடிநிகர்
குண்டுகள் மத்தியிலே
திருபிறை நிகர் அரிவாள்—சுத்திசூழ்
செங்கொடி ஓங்குதுபார்!

# தமிழ் ராஜ்யம்

அற்ற தறியாமை என்னும் இருள், — தமிழ்
ஆதித்தனின் ஒளி கண்டுவிட்டோம் !
குற்றமில்லாத தமிழ் ராஜ்ஜியத்தை — இங்கு
கோரியே யாவரும் ஒன்றுபட்டோம் !
‘ வல்லரசு ! தமிழ் வல்லரசு !!’ — என
வான இடிபோல் முரசடிப்போம்.
வில், புலி, மீனும் விளங்குகின்ற — தமிழ்
வீரக் கொடியைக் கரம்பிடிப்போம்.
அடிமை என இனித்த தமிழகத்தில் — சிறு
அணுவுமிலா விதம் செய்திடுவோம்
முடிமன்னராகி தமிழரெல்லாம் — நகை
முழங்க சுதந்திர மெய்திடுவோம்
கவியிலும் மற்றக் கலைகளிலும் — தமிழ்
கண்போல் ஒளிர உழைத்திடுவோம்.
புவியெலாம் தமிழர் ஆட்சியிலே — வந்து
புண்ணியம் கொள்ள அழைத்திடுவோம் !

•

# தீபாவளி!

சிறுகுழந்தை விழி எனவே
சிரிக்கும் தீபமே!
மறுவில்லா மங்கை கற்பில்
மலர்ந்த தீபமே!

எளியவர்கள் தனிகரென
எண்ணு தீபமே!
வெளி திகழும் தாரகைபோல்
விழித்த தீபமே!

இல்லம்தனக் கின்பந்தரும்
எழிலின் தீபமே!
வல்லிருளை நீக்கிநலம்
வழங்கு தீபமே!

தண்மதிக்கும் ரவிதனக்கும்
சக்தி தீபமே!
உண்மை திகழ் உயிர்க்குயிராய்
ஒளிரும் தீபமே!

மங்கள தீபத்தை முத்து
மாலைபோ லவும்,
பொங்கிடு தேன் சரக்கொண்டைறப்
பூவைப் போலவும்

ஆவலியாய் அமைத்தே தீ
பாவளி என்போம்!
பூவினிலே திருமகளின்
புண்ணிய மெய்வோம்!

## கவி மழலை

கண்ணன் குழலிலுண்டோ ?—வாணி
கைதவழ் யாழிலுண்டோ ?
வண்ணத் தமிழிலுண்டோ ?—நிர்மல்
வாய்தரும் மழலையின்பம் !

தென்றல் காற்றிலுண்டோ ?—அமுதம்
தேக்கும் நிலவிலுண்டோ ?
மின்னும் மழையிலுண்டோ ?—நிர்மல்
மீட்டும் மழலையின்பம் !

திருமகள் வீற்றிருக்கும்—செம்மலர்த்
தேனிலே, மன்மதன் கைக்
கரும்பிலே காண்பதுண்டோ ?—நிர்மல்
கவியின் மழலையின்பம் !

# படகோட்டி

தேன் தூக்கி முல்லைமலர் சிரிக்கத் தென்றல்
சிலிர்க்கவரும் வசந்தத்தின் மாலைப் போதில்,
வான்நோக்கி நிற்கின்ற வரையின் மீது
வாரியென நீர்தேக்கும் ஏரி தன்னில்.

அன்னம்நிகர் படகோட்டிப் பிழைப்போம்; வேர்வை
அரும்பிடவே புயமலுக்கத் துடுப்புத் தள்ள,
மின்னலிடைப் பெண்ணுடனே செல்வன் ஒருவன்
மிதந்துசெலும் அப்படகுகள் மெள்ளத் துயின்றான்.

இருள்பாய்ந்த மலைக்காட்டில் குயிலே காதல்
இசையெழுப்பத் திசையெல்லாம் நிலவின் வெள்ள
அருள்தோய்ந்த; தச்சமயம் படகு தள்வோன்
அயர்ந்திருக்கும் காதலரைப் பார்த்தங்கெண்வான் :

" பூத்திருக்கும் வேம்பமரத் தோப்பில் நேற்றுப்
புனைந்த குடிசையிலில்லாள் பசியால் வாடிக்
காத்திருப்பாள் வழிபார்த்து, இவர்கள் எப்போ
கண்விழித்துக் காசீவார்? எழுப்ப லாமா?....

சொல்லரிய உள்ளுணர்ச்சி விழி சுழற்றத்
துளிரிதழின் முத்தத்தின் சுவையில் தோய்ந்து
எல்லையிலா இன்பத்துள் மூழ்கியுள்ளார்!....
இவர்காணும் இன்பமெனக் கேனோ இல்லை?

பாரினிலிக் காதலர்கள் செல்வர்; நல்ல
பட்டுடையும் பொன்பணியும் கொண்டோர்; இந்தப்

பாரிடையே வேண்டுகின்ற இன்பமெல்லாம்
படைத்திடுதல் பணமதனின் சக்தி யன்றோ ?

நாவடக்கிச் சேவகஞ்செய் யானே நாளை
நல்லதொரு காலம்வந்து செல்வ னானால்,
பூவணையும் வண்டெனவே என்றனில்லாள்
புயமணைந்து படகினிலே பூரித்துய்வேன்.

அந்தநாள் என்படகை இந்நாளிங்கே
அமர்ந்திருப்போர் தள்ளவரின் அய்யோ தின்னார்
சிந்தைதான் மகிழ்வுறுமோ ? இன்றென்னைப்போல்
செப்பரிய ஏக்கத்தால் துயரில்வேமோ ?

என்னைப்போல் இன்னவரும் எல்லாம் வல்ல
ஈசனருட் படைப்பன்றோ ? இப்பூவதனில்
இன்பந்தான் பிறரடைய ஒருவர் துன்பம்
ஏற்பதுவோ ? இதிலுள்ள நீதி என்ன ?....

சித்தித்திடச் சிந்தித்திடச் சேரும் துன்பம்
சிந்தனையே நீங்கிவிடில் தேக்கும் இன்பம்
மந்திரிகர் மனமதனின் மாயை யாட்டாம்
மௌனமதே அழியாத சுகப்பூத் தோட்டம்.

விண்ணான ஏரிதனில் மேகத் தோணி
விரைவாகச் செலுத்தியே மேவு மௌனி
கண்ணோடு ஒளிகூட்டிக் காட்டுங் காட்சிக்
கருத்தினை மறந்ததே காலச் சூட்சி.

சிந்தித்திடச் சிந்தித்திடச் சேரும் துன்பம்
" சிந்தனையே நீங்கிலின்பம் " என்றே தேர்ந்தான்
சுந்தரமாய்க் காதலர்கள் துயிலும் போது
சொல்லுகின்ற தாலாட்டு லேஸா....ஐலேஸா.

# எழுத்தாளர் மகாநாடு

உழுதின்ப அமுதூட்டும் உளத்தும் வான
ஒண்மதிபோல் கலைமலர்ச்சி ஓங்கச் செய்யும்
எழுத்தாளர் மாநாடு ஏர் தமிழ் நாட்டின்
இருளிடையே தாரகைகள் எங்களின் எழுத்தே!

கலாபத்தின் பீலிகண்நேர் கற்பனைக் கண்ணை
காவியத்தில் தீட்டிவைத்த கம்பனின் ஆற்றல்
உலாசெய்யும் தமிழ்நாட்டின் உற்ற எழுத்தாளர்.
ஓதகடல் முத்தெல்லாம் எங்களின் எழுத்தே!

ஆடரங்கில் ஆருயிரின் அழகை ஆர்க்கும்
அற்புதமும் இளங்கோவின் சிலப்பதிகாரம்
பாடல்செய்யும் தமிழ்நாட்டு எழுத்தாளர் யாம்.
பசுஞ்சோலை தேன்மலர்கள் எங்களின் எழுத்தே!

கொண்டலதன் மின்னலெனச் சிறுகதை கோப்போம்;
கோகிலம்போல் தீங்கவிதை பாடிக் கொழிப்போம்;
வண்ணமலர் வண்டெனவே நாடகம் வளர்ப்போம்;
வணங்காத முடிமன்னர் வையத்தில் யாமே?

வீரமிகும் சுதந்திரமாம் வேள்வி தன்னை
விளைவித்தே புதுமையதன் முரசறைந்த
பாரதியின் தமிழ்நாட்டு எழுத்தாளர் யாம்.
படைவீரர் வேலெல்லாம் எங்களின் எழுத்தே!

அச்சமில்லை அல்லலெலாம் பொங்கி வந்தாலும்
அறிவுயர்ந்த எழுத்தாளர் ஒன்றாகி விட்டோம்
பச்சரத்தம் பறிமாறிப் பண்புள்ள தமிழ்தான்
பாரெங்கும் புகழ்மேவப் பணிசெய்து வாழ்வோம.

# மது

திவ்யமது ; திராக்ஷைமது ; ஊற்றடி பெண்ணே !
செக்கரென ரத்தஒளி சேர்த்திடக்கண்ணே ;
கவ்வுதுயிர் காலமது கனவென ஓட ;
கடலாடும் அலைஎனவே களிப்புடன் ஆட.

விண்ணளக்கும் வெண்மதியை மண்ணிலே பிடிக்க ;
வேட்கைஎல்லாம் தாரகைபோல் இருளிலே வெடிக்க ;
பண்ணிசைத்தே தென்றலெனும் தேரிலே பறக்க ;
பாவபுண்யம் ஒன்றெனவே யாவையும் மறக்க.

வண்டுணவே சுவை மதுவை வஸந்தகாலமே
வண்ணமலர்க் கிண்ணியிலே வார்க்கும் கோலமே
கண்டுகொள்வாய் ! எங்கும் நிறைந்துள்ள தேவனே
கன்னியே உன் முத்தமது என்றுமாவனே !

# புத்தன் புனர் ஜென்மம்

தன்நிகரில் வளநகரம் கபில வாஸ்து
    தனைநோக்கித் தன் அடியார் தொடர்ந்துகூடப்
பொன்ததும்பும் மேனியிலே செக்கர் போன்ற
    புனிதமிகும் காவியுடை பொலிய, வான
மின்னனைத்தும் வீற்றதென முடிச் சிகைதான்
    மேல்மூச்சு என விம்ம, வெய்யில் தனிலே
அன்பமுதை புவிக்கெல்லாம் அருளும் புத்தன்
    அங்கையிலே ஓடேந்தி நடந்து வந்தான்.

களங்கமிலா நிலவைநிகர் பளிங்குக் கல்லால்
    ககனமெட்டச் சமைத்தமாளிகையின் முன்னே
அளப்பரிய சோகமதே வடிவ மாகி
    அடித்தசிலை எனநின்ற யசோத ரையாள்
உளந்தனிலே புதைத்திருந்த காதல் தன்னை
    ஒளிமலர்ந்த விழியிரண்டில் முத்தாய் சிந்தி
இளமகவாம் இராகுலனை ஏங்கிப் பார்க்க
    எதிர்பார்த்த பதிபுத்தன் தாளில் வீழ்ந்தாள்.

“ இளங்கொடியும் பூமுகையும் என்ன நாங்கள்
    இரவினிலே துயிலுங்கால் விட்டுப் போனீர்!
விளக்கெனினும் காற்றலைக்கும் வெளியில் வைத்தால்
    விளையும் கதி தங்களுளம் தெரிந்தி டாதோ ?

முள்ளிமலர் வீதினிலே நடந்த பாதம்
 முட்களிலும் கற்களிலும் நடக்க லாச்சே!
வெளியுலகம் உமதெழிலைப் பருகு தற்கு
 விரும்பேன்யான் விருந்துண்ண வாரீர், அன்பே!"

"அன்பென்று சொல்வதற்கு அறிந்தாய் அம்மா!
 அகத்தினிலே அவ்வன்பின் ஆழம் காண்க!
முன்சென்ற நாட்கள் வெறும் சருகாம்; அந்நாள்
 மூண்டபெரும் துயர்த்தளையை முறிக்க வேண்டில்
தன்போன்று எவ்வுயிர்க்கும் அன்பே ஈவாய்;
 சாவதனை வென்றிடுவாய்; சங்கம் சேர்வாய்;
அன்பாகக் கறவைவரில் அதைத் தொடர்ந்தே
 அழகுஇளங் கன்றுவரும். பிக்ஷை யீவாய்"

சங்கத்தொடு பிக்ஷஉண்டு சாந்த மூர்த்தி
 தான்மொழிந்த கருத்துணர்ந்து யசோத ரையாள்
செங்கதிரின் ஒளியின்றித் திங்கள் தன்னில்
 சேருமொளி இல்லைஎனச் சித்தம் தேர்ந்து
புங்கவனின் புதியமதம் புகுந்தாள். ராஜ
 போகமதைப் புறக்கணித்துப் புதல்வன் தானும்
சிங்கமதன் பிடரிநிகர்க் காவி பூண்டு
 சித்தார்த்தன் நிழலெனவே பின்னே சென்றான்.

மாளிகையுள் சித்ரமஹால் வழியாய், வீதி
 வாயிலுக்குக் கருணைநிதி வருங்கால், சுவரில்
வாளிநிகர்க் கண்பெற்றும் பிறரை, வருத்தா
 மாயைஎனும் மாதரசி 'சித்ரம்' நோக்கி,

தோளிணைகள் அலையெழவே கண்ணீர் சோர,
தொண்டரெலாம் திகைத்திடவே, நின்றான். புத்தன்
தாளிணையே சத்யமெனும் ஆனந்தன் தான் :
"சற்குருவே ! தாம்வருந்தல் என்னே?" என்றான்.

"ஒன்றுமிலாச் சூனியத்தில் இருந்த என்னை
உயிர்த்தேக்கும் சிசுஎனவே உலகில் பெற்ற
அன்றிரவே மரணவிருள் அடைந்த என்றன்
அன்னையவள் சித்திரமிதே ! அவள்தான் செய்த
நன்றிதனை மறந்திட்டேன் அந்தோ ! இன்று
நான்கண்ட முடிபதனை அவள்பால் சொல்லி
புன்மைதரும் மரணத்தைப் போக்கு என்று
புகலாமல் புவிக்கெல்லாம் போதிக் கின்றேன் !........

கழனியதன் உரமதனால் விளைந்த நெல்தான்
கழனிதனை மறந்தக்கால் கண்ய முண்டோ ?
அழலதிலே சிலிர்த்திட்ட தீக் கொழுந்து
அதன் பிறப்பை மறந்தக்கால் ஆக்க முண்டோ ?
விழையுதுகாண் என்னெஞ்சம் பெற்ற அன்னை
விடுதலையைக் காணுதற்கு. அதனால் யானும்
மழையினிலே நுழைகின்ற மின்னல் போல
மானிலத்தே மற்றுமொரு பிறவி காண்பேன்."

"தூயவனே ! இன்னுமொரு பிறவி பெற்றால்
தோற்றுவது எவ்விடத்தே வடிவமென்ன ?
தாயனையாய் அம்மர்மம் தன்னைச் சொல்ல
தயைசெய்வீர்," எனக்கேட்டான் ஆனந்தன்தான்.
மாயைமகன் ஞானமணிக் குரலில் சொல்வான் :
"மானிடனாய், அகிம்ஸை எனும் மாண்பு சொல்லி,
பாயுமொளி பாரதத்தில் ஜனிப்பேன் ; கையில்
பாடல்செயும் ராட்டினமே பழகும் கண்டாய் !"

# உதிர்ந்த மலர்

முள்ளுடைச் சிறு செடியின்—கனவாய்
மூண்டு சிரித்தமலர்
கள்ளெனும் பொக்கிஷத்தால்—விம்மியே
கர்வம் அடைந்த மலர்.

பனித்துளி மணிசூடி—தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன்கீழ்—மௌனமாம்
கல்வியைக் கற்றமலர்.

அந்திச் சிவப்பினையும்—விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர்—மணமே
செய்து திளைத்த மலர்.

வீழ்ந்து கிடக்குதையே !—உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை—மண்ணிலே
வரைந்துளதோ வண்டே ?

## கு. ப. ரா!

பாட்டினுக்கோர் புலவனென்ற பாரதிதான்
பதமாக்கி வைத்திருந்த கலைநிலத்தில்
நாட்டினர்கள் சிந்தையெலாம் மணக்கப்பூத்த
நவமான மறுமலர்ச்சி நம், கு. ப. ரா!

அன்பு சொட்டும் பொன்மொழியும்; அறிவின் ஆழம்
அமைதியுடன் கூத்தாடும் அருளின் நோக்கும்;
தன்னலந்தான் சற்றுமிலாத் தியாகப் பாங்கும்
தமிழரிடை கொண்டு வந்தோன் நம், கு. ப. ரா!

ஔவைஎன சின்னஞ்சிறு சொற்கள் கூட்டி
அமிர்ததுளி நிகர்த்தசிறு கதைகள் மூலம்
யௌவனமாம் மனக்கிளர்ச்சி விரிவைஎல்லாம்
எழுதிவைத்த மொழி வல்லோன்நம், நம் கு. ப. ரா!

மேல்நாட்டுக் கவிஞர்களின் பார்வைதன்னை
மெள்ளமெள்ளத் தமிழ்க்கவியில் மெருகுதீட்டி
ஆல்போன்று ரசிகருக்கு நிழலளித்தோன்
அருளமரன் அவன்பெயர்தான் நம், கு. ப. ரா!

# உண்மைக் கதை

கண்ணன் இருந்தானும்—திரௌபதை
கட்டத் துகில் தந்தானும்
உண்மையாய் அவனிருந்தால்—எனக்கே
ஓர் கந்தை தாரானோ.

அக்ஷய பாத்திரமாம்—அமுது
அள்ள அள்ள வருமாம்
நிச்சயம் அஃதிருந்தால்—எனையே
நேசித் தமுதிடாதோ ?

அறமுயர் சித்தார்த்தனும்—சாகா
ஔஷதம் கண்டனனும்
இறவா தவனிருந்தால்—எனது
இறப்பைத் தவிரானோ ?

பொன்னொளிர் பாரதத்தில்—ஜாதிப்
போரும், அடிமை யன்றி
இன்பம் தரும் கதைகள்—வேறு
என்ன இருக்குதையா ?

## இயற்கையின் கானம்

சந்திர சூரியர்கள் .... என்றன்
தாளங்க ளாகுமடா !
விந்தைக் கடலலைகள் .... அதிலே
விம்மி எழும் ஒலியாம் !

அருவியே என்சுருதி ... விண்ணில்
அதிர்இடி மத்தளமாம்
கருங்குயில் கத்தலது .... என்றன்
கானத் தின்கார்வையடா !

முரலும் வண்டினங்கள் ... வஸந்த
முத்தம் பெருந்தென்றல்
குரலின் இனிமையிலே .. இழைந்து
கொஞ்சும் சுரங்களடா !

பளிச்சிடும் தாரகைகள் ... என்றன்
பாடலின் வார்த்தைகளாம்
ஒளித்திரு வானவில்லே .... என்றன்
உள்ளத் துணர்ச்சியடா !

வானம் மயங்கிநிற்க .... கால
வாயினல் பாடுகின்றேன்
தானமும் பாடிடுவேன் .... ஊழி
சலதி கொந்தளிப்பாம் '

# காதலின் பதில் !

விண்மீனை முத்தாரமாய்த் தொடுத்து
வேண்டியே காதற்குப் போடப் போனேன்
கண்ணீர்த் துளி மாலை யன்றி வேறு
கருதிடேன் என்றவள் கழறினாளே ?

தண் மதி தன்னிலே மது வடித்து
தயவோடு காதற்குப் பானம் தந்தேன்
எண்ணப் பானமன்றிப் பிறி தொன்றையும்
ஏற்றிடேன் என்றவள் இயம்பினாளே !

பூவின் சுகந்தத்தை மஞ்சமாக்கிப்
புண்ணியக் காதலைக் குந்தச் சொன்னேன்
சாவின் மஞ்சமன்றிப் பிறி தொன்றிலே
தங்கிடேன் என்றவள் சாற்றினாளே !

## சிறைச்சாலை

**கைதி :**

விண்ணின் சுடர்விழித் தாரகைகாள்—ரவி
வீழ்ந்து நடுநிசி வேளை வந்தும்
எண்ணம் அடங்கித் துயின்றிடாமல்—கைதி
என்றன் மனம்போல் துடிப்பதும் ஏன் ?

**தாரகை :**

கலங்கிக் கரைந்திடும் மானிடனே—இட்
கண்என யாங்களே மின்னிடினும்
பலவும் விளைத்திடும் காலமெனும்—பெரும்
பாழ்ச்சிறை வதியும் கைதிகளே !

**கைதி :**

காலச் சிறையதன் கைதிகளே—உம்மைக்
கைதிஎன் றடைத்த காவலன் யார் ?

**தாரகை :**

கோல ஒளித்தளை பூட்டிவிட்டு—ஒரு
குறியற் றிருக்கும் இறைவனடா !

**கைதி :**

எந்த நீதியைக் கடைப்பிடித்து—அந்த
இறையவன் உம்மைச் சிறைச்செய்தனன் ?

**தாரகை :**

சொந்த மதியொடு அன்னவனே—வெகு
சூட்சியாய்த் தொகுத்த நீதிகொண்டு
உடலில் உயிரைச் சிறைசெய்து—மின்
ஒளியைப் புயலிற் சிறைசெய்து
கடலில் அலையைச் சிறைசெய்து—அவன்
கண்ட தனைத்தும் சிறைசெய்தான் !

## காதலா? சாதலா?

கண்ணிற்கும் காட்சிக்கும் காதல்
கற்பனைக்கும் கவிதைக்கும் காதல்
விண்ணிற்கும் சுடருக்கும் காதல்
விளக்கினிடம் விட்டிற்குக் காதலா!

பூவிற்கும் வண்டிற்கும் காதல்
பூட்டிற்கும் சாவிக்கும் காதல்
நாவிற்கும் சொல்லிற்கும் காதல்
நாகத்திடம் தேரைக்குக் காதலா?

போருக்கும் வீரர்க்கும் காதல்
புலத்திற்கும் விளைவிற்கும் காதல்
நீருக்கும் மீனுக்கும் காதல்
நெருப்பினிடம் விறகிற்குக் காதலா?

அகிலுக்கும் மணத்திற்கும் காதல்
ஆழிக்கும் நிலவிற்கும் காதல்
முகிலுக்கும் மயிலுக்கும் காதல்
மோழையிடம் ஏழைக்குக் காதலா?

# நவராத்திரி கொலு

உழவுத் தொழிலாளி—நுதலினில்
உதிர்ந்த வேர்வைத் துளி
கொழுத்த முதலாளி—அணியினில்
கொலுவாச்சு வைரமாய் !

ஆலைத் தொழிலாளி—உடலினில்
அள்ளி எடுத்த ரத்தம்
காலன் முதலாளி—பேலாவில்
கள்ளாய்க் கொலுவாச்சு !

அச்சுத் தொழிலாளி—கண்ணில்
ஆடும் ஒளி அணைய
கொச்சை முதலாளி—வீட்டிலே
கொலுவாச்சு விளக்காய் !

உண்மைக் கொலுவிதனை—உங்களின்
உள்ளமே பார்க்கையிலே
மண்பாவைக் கொலுவை—கண்டிட
மடமை மிகுந்தீரே !

•

## பேராசைக்காரி

பொங்கும் கடலென யா னிருந்தால்—அவள்
பொன்மணர்க்கரை எனப் புணரவராள்
கங்குல தாகவே யானிருந்தால்—அவள்
கள்நில வாகிக் கலக்கவராள்

துயிலும் விழிஎன யானிருந்தால்—அவள்
சொப்பன மாகிச் சுகிக்கவராள்
பயிர்வளர் வயலென யானிருந்தால்—அவள்
பரிவோடு வரப்பென பக்கம் வராள்

தெண்ணீர்த் தடாகமாய் யானிருந்தால்—அவள்
செம்மல ராகியே சேரவராள்
விண்ணின் விரிவென யானிருந்தால்—அவள்
விந்தை அமைதியாய்க் கொஞ்சவராள்

காட்டாளி வில்லென யானிருந்தால்—அவள்
கணைஎனக் கட்டி அணையவராள்
பாட்டாளி மகனென யானிருந்தால்—அவள்
பட்டினி வயிறென ஒட்டவராள் !

# சித்திரை

புத்தமுத ஜோதிவெள்ளம்
பொங்கிவரும் நாளே !
பொன்நிறமாய் வேப்பமரப்
பூமணக்கும் நாளே !

கத்துகுயிற் கவிதையில் மாங்
கனிகனியும் நாளே !
காதலர்கள் நெஞ்சின்பக்
கனல் சிலிர்க்கும் நாளே !

முத்துமுல்லை யோடுதென்றல்
முத்தமிடும் நாளே !
மூடுபனி நீங்கிஎழில்
முகமலரும் நாளே !

சித்திரையின் முதல் நாளே
தேன்வஸந்த நாளே !
செந்தமிழர் புதுவருடம்
செல்வத்திரு நாளே !

அ—6

## முதல் முத்தம்

கொண்டலதே மின்னலுக்கு
கொடுக்கும் ஒளி முத்தம் !
வண்டதுவே தண்மலர்க்கு
வழங்குசுவை முத்தம் !
விண்ணதுவே வெண்மதிக்கு
விளைக்கும் எழில் முத்தம் !
தண்டமிழ்த்தாய் தன அமுதால்
தந்தமுதல் முத்தம் !

## "கடவுளின் வேலை"

பக்தன் :

"கந்தமலர் கட்டும் பண்டாரமே !
கடவுளையே தாங்கள் கண்டதுண்டோ ?
சந்ததம் அவர் செய்யும் வேலை என்ன ?
சாற்றிடவே வேண்டும் தமியனுக்கே"

பண்டாரம் :

"ஆவிஎனும் தூய மலரதனை
அங்கமெனும் நாரில் தினம்தொடுத்து
மேவிவரும் காலக் கடைத்தெருவில்
விற்பதுவே அவனின் வேலையப்பா !"

பக்தன்:

"கனவிரும்பைத் தட்டும் கொல்லனாரே !
கடவுளையே தாங்கள் கண்டதுண்டோ ?
தினமும் அவர் செய்யும் வேலை என்ன ?
தெரிந்திடவே சொல்வீர் சேயனுக்கே"

கொல்லன் :

"கனவிரும்பை அனைய ஜீவனையே
காதலாம் சம்மட்டி யாலடித்து
மனிதரெனும் வண்டிச் சக்கரத்தில்
மாட்டுவதே அவனின் வேலையப்பா !"

பக்தன் :

" கவனமதாய் பகடை ஆடுவோரே !
கடவுளையே நீங்கள் கண்டதுண்டோ ?
தவராதவர் செய்யும் வேலைஎன்ன ?
தயவுடனே சாற்ற வேண்டுகின்றேன். "

சூதாடி :

" உலகெனும் சொக்கட்டான் தனைவிரித்து
உதித்தல்மரித் தலாம் பகடையுருட்டி
கலகமேசெய் வினையாம் காய்களிட்டு
களிப்போடு சூதாடல் அவன் வேலையே "

பக்தன் :

" கண்காட்டியே அழைக்கும் கணிகையாளே !
கடவுளையே நீயும் கண்டதுண்டோ ?
உண்மையதாய் அவர்செய் வேலை என்ன ?
உவந்துரையே செய்யக் கோருகின்றேன் "

கணிகை :

" உயிரான கண்தனைக் காட்டிக்காட்டி
உலகுள்ள ஒவ்வொரு அணுக்களிலும்
அயராது தினம்தினம் என்றனைப்போல்
அவிசாரி போவதே அவன் வேலையாம் "

# இருளில் ஒளி

தண்வாவிப் பள்ளிதுயில்
தாமரையின் முகைமேல்,
விண்மீனின் கண்ணீராம்
வெண்பனிநீர் வீழ;

கண்சொக்கும் துயில்கலைந்து
கமலமுகை தானும்,
வெண்முத்து நேர்பனிநீர்
வெடுவெடுக்கச் சொல்லும்:—

“கருக்கிருளின் அழுக்கினிலே
கலந்துவந்த பனியே!
திருத்திகழென் மேனியைநீ
தீண்டிடத் தகாது.

கண்கொள்ளாக் காட்சியினைக்
கண்டிருந்தேன் கனவில்;
துண்டித்தாய் என் கனவை,
தூரப்போ, போ, போ!

வயிரத்தின் ஒளிமேனி
வடிவழகன்; வானோன்:
“உயிருள்ள தெனக்குன்னல்
ஒண்காதல் கமலி!

காதலியே உன்முகத்தை
காணுதற்கே என்கண்
பூதலமேல், பிறபாரேன்
பூவையே'' என்றுரைத்தான்—

என்று, மலர் முகைநெஞ்சம்
இறுமாந்து விம்ம,
சின்னபனித் துளியதுதான்
தேகமுந் தள்ளாடி

வாவியிலே வீழ்ந்தேதன்
வருத்தம்கொள் வாழ்வின்
ஆவியினை விடுந்தருணம்
அருணன்வந் தணைந்தான்!

பனித்துளியை முத்தமிடும்
பரிதியினை நோக்கி
சினத்துடனே விரிந்தமுகை
சிரித்துச் சிந்திக்க......

"கண்ணீரே காதல்பெறும்
கனவல்ல'' என்னும்
உண்மைதான் உதிக்குங்கால்
ஓங்கியது இருளே !

## பரவர் பாட்டு

விடிவெள்ளி நம் விளக்கு ஐலேஸா!
விரிகடலே பள்ளிக்கூடம் ஐலேஸா !
துடிக்கும் அலை நம் தோழர் ஐலேஸா !
சூழ்முகிலின் நீழல்குடை ஐலேஸா !

பாயும் புயல் நம் ஊஞ்சல் ஐலேஸா !
பனிமூட்டம் உடல் போர்வை ஐலேஸா !
காயும் ரவிச் சுடர் கூரை ஐலேஸா !
கட்டுமரம் வாழும் வீடு ஐலேஸா !

பின்னல் வலை நம் சுவடி ஐலேஸா !
பிடிபடும் மீன் கல்விப்பொருள் ஐலேஸா !
மின்னல் இடி காணும் கூத்து ஐலேஸா !
வெண்மணலே பஞ்சு மெத்தை ஐலேஸா !

முழுநிலவு நம் கண்ணாடி ஐலேஸா !
மூச்சடக்கி நீந்தல் யோகம் ஐலேஸா !
தொழும் தலைவன் பெரும்வானம் ஐலேஸா !
தொன்மைத் தொழிலாளர் நாமே ஐலேஸா !

●

# தொழில்

கீழ்த்திசையின் இருட்கீறி கிளர் உஷை நுதலில்
கிளிமூக்கு நிறப் பொட்டு தீட்டும் கிரணன்,
ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல் கற்றே
அனற்சுவாலை யிடத்தோடி அருளும் காற்று,
வீழ்புனலில் ஏழ்வர்ணம் விளைத்து புலத்தை
விளைவேற்றி வினையின் திறம் விளம்பும் நதிகள்
சூழ்மதுவை விருந்தீந்து சுரும்பு பாட
சுகந்தத்தை தூவுகுளிர் சோலை மலர்கள்,

அந்தரத்தே இருட்சாணம் மெழுகி உடுவாம்
அரும்புள்ளிக் கோலமிடும் அந்தி வானம்
விந்தையதாம் வேழமென விண்ணில் பறந்து
வெண் முத்து நேர் திவலை சிந்தும் மேகம்,
செந்துளிராம் புல் நுனியில் வைரச் சிரிப்பை
தெளித்து ரவி அணைப்பினிலே சேர் பனித் துளிகள்
சுந்தரமாய் காதலர்கள் தூக்கம் நீங்கி
சொல்லாடத் தூண்டவரும் சோதி மதியும்.

மண்ணுழுது பொன் நெல் தரும் தாய்நேர் உழவர்,
மானமொடு வாழகலை நெய்கை கோளர்,
விண்ணதிர முரசார்த்து பகைமை வீழ்த்தி,
வெற்றியின்சங் கூதுகின்ற யுத்த வீரர்,
கண்துயிலை நேர்மரணம், கண்ணின் விழிப்பு
காட்சி நிகர் ஜனனம், மொழி காக்கும் கவிஞர்.
உண்மை என உள்ளதேனும் தெய்வம் இந்த
உலகதனை படைக்க முதல் உற்றது தொழிலே.

தொழில் இன்றேல் அழிவாகும், அழிவதும் தொழிலே,
தொழிலில்லா இடமில்லை, சுதந்திரம் தொழிலே,
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே,
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே,
கழிவில்லா பெருமையதன் கருத்துத் தொழிலே,
காலத்தால் களங்கமுறு கற்புத் தொழிலே,
தொழிலாளர் ஓங்கிடுக, அவர் பசித் துடைக்க
தொண்டாற்றல் நமது தொழில் சுகமாம் தொழிலே.

## மனம்

கொடிய மனது என்றென்னை
குறைகள் கூறும் மானிடரே!
நெடிய வானவில்லாக
நிலவும் என்எழில் கண்டீரோ?

பீடை மனது என்றென்னை
பிழைகள் பேசும் பெரியீரே!
ஆடும் அலைசூழ் கடலினிலே
அமர்ந்த என்எழில் கண்டீரோ?

பாவ மனது என்றென்னை
பழித்துக் கூறும் பாரோரே!
பூவை மீட்டும் யாழ்நரம்பில்
பொலியும் என்எழில் கண்டீரோ?

கலக மனது என்றென்னை
கடிந்து பேசும் கண்ணியரே!
மலரி னுள்ளே நிறைந்துள்ள
மதுவில் என்எழில் கண்டீரோ?

கருமி மனது என்றென்னை
காய்ந்து பேசும் மேலோரே !
இருண்ட இரவில் நிலவாக
இயங்கும் என்னெழில் கண்டீரோ ?

மாறும் மனது என்றென்னை
வசைகள் கூறும் மாதவரே !
சீறும் பச்சை யோந்திநிறம்
திகழும் என்னெழில் கண்டீரோ ?

## உவமை உண்டோ?

குழந்தையதன் கன்னத்திலே
கூத்தாடும் சிவப்பதனை
அழலெழுப்பும் செக்கரென
அறிவிக்க மாட்டேன்யான்!

2

சிறுகுழந்தை முகத்தினிலே
சிரிக்கின்ற திருவொளியை
கறுக்கிருளில் கண்விழிக்கும்
கலைமதியம் என்னேன்யான்!

3

கொஞ்சும் குழந்தைநாவில்
குரலெழுப்பும் மழலைதன்னை
பஞ்சவர்ணக் கிள்ளையதன்
பாடலெனச் சொல்லேன்யான்!

4

உடல்குலுங்க குழந்தையது
உந்தி உந்தித் தவழ்வதனை
கடலாடும் அலைஎனவே
கட்டுரைக்க மாட்டேன்யான்

5

பேசாமல் பேசுகின்ற
பிள்ளையதன் கண்களிணை
பாஷாபி மானத்தினல்
பைந்தமிழே என்னேன்யான் !

6

ஆனந்தம் தரும் குழந்தை
அழகுரைக்கும் உவமையது
வானத்தை நோக்கிஎறி
வாளி என வீழ்ந்ததம்மா !

# திருநாள் !

புத்தமுத ஜோதிவெள்ளம்
பொங்கிவரும் நாளே !
பொன்நிறமாய் வேப்பமரப்
பூமணக்கும் நாளே !

கத்துகுயில் கவிதையில் மாங்
கனி கனியும் நாளே !
காதலர்கள் நெஞ்சினிலின்பக்
கனல்சிலிர்க்கும் நாளே !

முத்துமுல்லை யோடுதென்றல்
முத்தமிடும் நாளே !
மூடுபனி நீங்கி எழில்
முகமலரும் நாளே !

சித்திரையின் முதல்நாளே !
தேன் வசந்த நாளே !
செந்தமிழர் புதுவருடம்
செல்வத்திரு நாளே !

## பிரிவும் நிறைவும்

ஆழ்கடலும் அலையும்போல் பிணங்கிப் பின்னர்
ஆதவனின் ஒளிக்கேங்கும் மதிபோ லாகி,
வீழ்புனலே வீணையாகி வான வில்லின்
வியன்கனவைத் தென்றலில் பண் இசைக்கும் வேளை,
தாழ்வடையா விண்விரிவும் விண்ணில் தங்கும்
தன்மயமாம் அமைதி எனத் தழுவி நின்றோம்.
ஊழ்வினையால் இருகரையாய்ப் பிரிந்தோம். என்னில்,
ஓடுதடி! நம்மிடையே நதியாய்க் காதல்.

2

குருதியொடு கூடிவந்த செழும் நிறம்போல்
குழந்தைமுதல் நம் உயிரில் இணைந்த நேயம்;
முருகவிழும் மலர்முகைமேல் வண்டு நின்று
முத்தமிடக் கண்டுமுத்த மிட்ட தன்மை
இருக்குதுளம் மகிழம்பூ வாசம் போலே
இதை எண்ணில் மனம் மயக்கில் கிறு கிறுக்கும்.
நெருப்பெனவும் விளக்கெனவும் பிரிந்தோம். என்னில்,
நிறைந்துளது இரண்டிலும் நம் வெப்பக் காதல்.

# கிழவி

ஒட்டகத்தின் முதுகல்ல கிழவிக் கூனல் ;
ஒளியிழந்த வைரமல்ல கிழவிக் கண்கள் ;
வெட்டுகத்தி காயமல்ல நெற்றிச் சுருக்கம் ;
வெள்ளிவெண் சாமரமல்ல நரைத்த கூந்தல் ;

ஆலமர விழுதல்ல கைகொள் கம்பு ;
அலையதனின் அசைவல்ல முதுமை ஆட்டம் ;
நீலநிற மேகமல்ல அழுக்குச் சேலை ;
நீள்வானின் பனியல்ல கிழவிக் கண்ணீர் !

மகளில்லை மகனில்லை மாதா உள்ளேன் ;
மதியில்லை ரவியில்லை வான முண்டு ;
இகழில்லை புகழுல்லை இரப்ப துண்டு ;
எளியவள்நான் இவ்வுலகில் என்ன செய்வேன் ?

கதியில்லை விதியில்லை கவலை யுண்டு;
கதைசொல்வேன் குழந்தைகளே கருத்தாய் கேட்
" புதிதான குறுத்தோலை பழுப்பைக் கண்டு [பீர்
புன்னகைக்கும்பின் அதுவும் கனவாய்ப் போகும் !"

## உதயம்

தங்க ரேகை காட்டி—இருளை
சலனப்படச்செய்து
பொங்கு கடல்பாட—இங்கே
பூத்ததுவே உதயம்.

சுதந்திரப் புட்கள் குலம்—இனிய
தோத்திரமே பாட
இதய மகிழ் வுடனே—கமலம்
இனிக்கவந்த உதயம்.

சோர்வு தளை அறுத்து—உழவுத்
தொழில்கள் முன்னேற
நேர்மை தவறாமல்—உலகை
நேசித்திடும் உதயம்.

அடிமைத் துயில் போக—மாந்தர்
அமரநிலை கொள்ள
வடிவு மிகுந் தமிழில்—இங்கே
வந்ததுவே உதயம்.

# விதியின் விழிப்பு

**விதி :—**

காற்றது செலுத்தும் கார்பரியை
கண்டே களிக்கும் கவிஞனே கேள் :
“தோற்ற மனைத்திலும் சூழ்ந்திருந்து
சுழலும் உலகாள் விதியடா யான்”.

**கவி :—**

என்னே ! என்னே ! யாரது நீ
இருளுள் இருளாய் இருப்பதுவா ?
உன்னை நினைத்தே உளம் நடுங்கும்
ஊமை மனிதன் நானல்ல போ !

**விதி :—**

பொங்கிடும் வங்கம தாயினும் யான்
போடும் கோட்டினைத் தாண்டிடாது.
கங்குலுட் கங்குல தாயிருந்தும்
செங்கதிர்ப் பட்டம் விடுகின்றேன் !

**கவி :—**

ஒருநாள் முழுதும் பறக்காமல்
ஒளிகுன்றி வீழ்கதிர்ப் பட்டந்தனை
அருவாய் வானில் நின்றுவிடும்
ஆசாமி யாநீ அஹ்ஹஹ்ஹா !

**தொழிலாளி :—**

ஏங்கி இளைத்த கவித்தோழா!
இடிஎன நீதான் சிரிப்பதும் ஏன்?
ஓங்கி உன்முன் நிற்பது யார்?
ஓகோ, உணர்ந்தேன். திருட்டுவிதி!

கண்போல் காத்த என்குழந்தைக்
கன்னமே மின்னிய ரத்தத்தை
மண்மேல் புதைத்து செழும் ரோஜா
மலரென மாற்றிய விதியிதுவே!

என்னைத் திருகிப் பிழிந்தெடுத்தென்றன்
இருவிழி சிந்திய நீர்த்துளியை
பண்ணைச் செல்வன் பையில் வெள்ளிப்
பணமென மாற்றிய விதியிதுவே!

மாமரம் தன்னை வஸந்தகாலம்
மாறிமா றிவந் தணையவரும்
க்ஷேம மளித்திடும் தென்னை தனைத்
தேடி வஸந்தம் வந்ததுண்டோ?

ஒருவிழி இல்லை விதிதனக்கு
உண்மைத் தெரிந்ததா? உயர் தோழா!
குருடனைப் பார்ப்ப தபசகுனம்?
குடல்பசி கொண்டது, போய்வருவேன்!

# ரிக்ஷாகாரன்

கந்தை உடைதான் இடையிலுண்டு—கையில்
கைதியைப் போலவே விலங்குண்டு ;
சந்து முனையிலே நாய்களைப்போல்—என்றன்
சகாக்கள் கூட்டமும் நிற்பதுண்டு.

2

கையினில் வாடகை ரிக்ஷாவுண்டு—கால்கள்
கடலலைப் போலோடக் கற்றதுண்டு
மெய்மேல் ரவிவொளி வீழ்வதுண்டு—நகர்
வீதியில் பலரென்னை பார்த்ததுண்டு.

3

தன்னிலை உணர்ந்திடா குதிரைவண்டி—பெரும்
தடியனை நிகர்த்த மாட்டுவண்டி
மின்சார அபாய டிராமுவண்டி—உயர்
விழுங்கிடும் பூதமாம் மோட்டார்வண்டி

4

இந்த வண்டிகளில் ஏறிடுவார்—மதி
இருக்கும் மனிதன் இழுத்துசெலும்
சுந்தர வண்டியில் ஏறார்பலர்—சிலர்
தோஷ மெனத்தூர ஓடிடுவார்.

5

மோட்டார் வண்டிதனில் சென்றிருந்த—சில
முதலாளி ஒவ்வொரு வேளையிலே
ஆட்டப் பரிஎன எனைநினைத்து—' ஓடு
அவசரம்' என்று அணுதருவார்.

6

காலைமுதல் இருள் மாலைவரை—பாலைக்
கானலென சுற்றி யானலைய
மேலுற்ற தளர்வைப் போக்கிடவே—மனம்
மெள்ள 'குடித்திடச் செல்' லெனுமே.

7

குழந்தை மனமது கொண்டுதுள்ள—கண்கள்
கூசிட காடியாம் கள்குடிப்பேன்.
விழலதைப் போல புவிவயலில்—அந்த
விதியின் தவறால் விளைந்துவிட்டேன்.

8

வயிராம் அடுப்பில் பசித்தீவுண்டு—விழி
வழங்கும் நீர்த்துளி சமைப்பதற்கு
உயிர்தளும்பும் உடல் பானையுண்டு—தங்கி
உண்டிடச் சாவாம் விடுதியுண்டே!

# வகையுளதோ?

ஏழை உழவனின் சேயென்றன்
எண்ணம் ஈடேற வகையுளதோ?
தோழ ரிடத்திலே சொல்லஎணில்
துக்கமே நெஞ்சைப் புடைக்குதையோ

சுந்தரச் செக்கரை முன்னொரு நாள்
சிந்தூர மென்று திலதமிட்டேன்.
அந்தோ! அதென்றன் மூதாதையர்
சிந்திய குருதிக் கண்ணீரையா!

பின்னர் ஓர்தினம் இன்புறவே
பெரிய விண்மீன் தனை மோந்தேன்.
என்னே! அதென்றன் தந்தை நுதல்
இருந்த வேர்வைத் துளிகண்டீர்!

வந்திடும் தென்றலில் மற்றொருநாள்
வண்ணத் தமிழிசை கேட்கலானேன்.
அந்தோ அதென்றன் தாய்பசியால்
வெந்திடும் வேளையில் விட்டமூச்சு!

# பெண்ணுரிமை

பெண்ணுக் குரிமையே இல்லையென—வாது
பேசிடும் நாவைத் துணித்திடுவோம்!
கண்ணுக் கொளியது இல்லை யெனில்—இங்கு
காட்சி யுண்டோ ஒரு மீட்சியுண்டோ ?

2

நல்ல யாழது ஆண்களெனில்—சுவை
நாதம் தரும்விரல் பெண்களென் போம்.
தில்லையில் ஆடிய செஞ்சடையான்—பெண்ணை
சேர்த்துடல் கொண்டதைச் சிந்தித்தீரோ ?

3

இரவு பகலது இல்லை எனில்—இங்கு
எப்படி இயங்கிடும் நாளொன்று தான் ?
தரணி தழைத்திடும் சுகமனைத்தும்—கற்புத்
தருணியர் ஆடவர் சங்கமமாம் !

4

உச்சிக் கிளைதனில் நின்றபடி—பாதம்
ஊன்றியே வந்தி அடிமரத்தை
அச்ச மிலாமலே வெட்டுலகே !—நாளை
அடையும் கதிநீ அறிகுவையோ ?

## ஓட்டர்

சாலை மரங்கள் நிழலினிலே—நாங்கள்
தங்கி வெளவாலென வாழுகின்றோம்.
காலை யருந்த பருக்கை யின்றி— ஏங்கி
கங்குலில் விண்மீனைக் கா ணு கின்றோம்.
பாலை நிலமென தேகம் சுண்ட—பெரும்
பாடு பட்டு பாதை போடு கின்றோம்.
கூலி பெறாத மழையது போல் —நாங்கள்
கொட்டுரோம் ரத்தக் கண்ணீர் புவியில்.

# சந்திரன்

கவிதை யணங்கு வாழ் வெண்மலரோ ? — சூரைக்
காற்றுக் கணைந்திடா தீபமதோ ?
ரவிதான்எடுத்த புனர் ஜன்மமோ ? — இருள்
ராணி மகுடத் தொளிரும் முத்தோ ?

திங்களெனும் பெண் திரும்பிடவே — அவள்
சேலையிருள் சிறிதே விலக
கொங்கை களிலொன்று காண்கிறதோ — கடல்
கூவி திரைகை கொட்டிச் சிரிக்க ?

தாரணி மகிழ்ந்து பூசுதற்கு — குளிர்
தங்கிடும் சந்தனக் கிண்ணமதோ ?
சாரமுள்ள இளங் காதலர்க்கு — மதன்
தம்பலம் வழங்கும் வெள்ளித் தட்டோ ?

பதுங்கிய எண்ணமாம் பூனைகளே — சுவை
பார்த்திடப் பொங்கிய பால் குடமோ ?
பொதுவுடமை முழக்கம் புரிய — வான்
பூத்து எழுந்திட்ட வெண் சங்கமோ ?

•

## முதல் இரவு

மாந்தோப்பில் வஸந்தருது
மருவிவரும் போகும்;
மதுதாங்கும் மலரிடமே
வண்டுவரும் போகும்;
காந்திமிகும் வயிற்றில் பசி
கடிகிவரும் போகும்;
கன்னிகைஎன் நெஞ்சில் கொண்ட
கனிவுபோவ துண்டோ?

வெண்மணலின் ஆற்றினிலே
வெள்ளம்வரும் போகும்;
விண்ணிடையே வெள்ளி நிலா
விம்மிவரும் போகும்;
கண்ணுறங்கும் கங்குலிலே
கனவுவரும் போகும்;
கன்னிகை என் நெஞ்சிலுற்ற
காதல்போவ துண்டோ?

ஆழியிடை பொங்கிபல
அலைகள் வரும் போகும்
அனலிடையே சுவாலைபல
ஆடிவரும் போகும்;
ஊழிதனில் பலஉலகம்
உண்டாகும் போகும்;
ஒண்டொடிஎன் நெஞ்சிலொளிர்
உண்மை போவதுண்டோ?

தாழும் அந்தி வேளை தென்றல்
தளும்பிவரும் போகும் ;
தண்மழையால் தருவினிலே
தளிர்கள்வரும் போகும் ;
மோழை செயும் தொழிலில்பணம்
முந்திவரும் போகும் ;
முதல் இரவு பள்ளிதனில்
மூண்டமகிழ் போமோ ?

# கூடை பின்னுபவள்

வாடியப் பிறம்பும் ஏனோ? — இரத்தம்
வற்றிய நரம்புடலில் முற்றியுளதே!
கூடையும் முடைய வேணுமோ? — வயிற்றில்
கொடியபசி குடலை முடைந்திடுதே!
தாடைகளில் குழி யுளதே! — பழங்கள்
தாங்கும் கூடைதனிலும் குழி வேணுமோ?
ஆடையிலே பொத்தலுளதே! — கூடை
யதனிலே பொத்தலுள ததிசயமோ?

# முல்லை

ஆடவர் கைதொடா கன்னியர்கள்
அஞ்சனக் கூந்தற் கருவானை
நாடிநன் முத்தமே நல்கிடுவேன்
நட்சத் திரம்நிகர் முல்லைமலர்!

2

எழிற்கடல் பூத்த முத்ததுவோ
எனவே கவிபுகழ் பெண்பல்லை
பழித்திடும் மேன்மைப் பதம் பெற்றேன்
பாடிடும் வண்டுறை முல்லைமலர்!

3

மணத்தை அளித்து தளர்ந்தமனம்
மகிழ்வால் மலர்ந்திடச் செய்திடுவேன்,
பணத்தைப் பழித்திடும் வெண்சோறு
பற்றிடும் பால்நிற முல்லைமலர்!

4

வந்திக்கும் தெய்வச் சபைதனிலும்
வரவேற் பெனக்கு அதிகமுண்டு
இந்திய கைம்பெண் இனம்மட்டும்
என்னை அவமானம் செய்கின்றனர்!

## 5

அந்தோ கைம்பெண் நிலையதுதான்
ஆழப் பதிந்தென் ஆவிதனைக்
கொந்தி குணத்தை குறைக்காவிடில்
கோமள மேனியும் வாடிடுமோ !

# மழைத் தாரை

வானவர் மென்மலர் தூவுராரோ ? — அன்றி
வெப்ப அரக்கனைக் கொல் சரமோ ?
மானில நங்கையின் மானம்காக்க — வெளி
மகிழ்வொடு நெய்திடும் நூலிழையோ ?
தேனொளிர்ப் பூங்கணை மன்மதனே — காதல்
சேதி சொல்லிவிட்டத் தூதுவரோ ?
ஏனென கேட் பாரற்ற உழவர்—நிலைக்
கீசன் உகுக்கும் கண்ணீர்த்துளியோ ?

## தூக்கம்

அங்கத் தளர்வதனுல் — விழியை
அணையும் தூக்கமது
தங்கக் கிண்ணத்திலே — பருகும்
தண்மது வின் மயக்கோ ?

2

மண்ணில் புதையும் வித்து — மண்ணிலே
மலர்ச்சி காண்பது போல்
கண்ணில் புதையும் துயில் — கண்ணிலே
காந்தி விளைப்பது வோ ?

3

அரசன் ஆண்டியையும் — சமமாய்
ஆளும் அரசிது வோ ?
மரண மேடையின்முன் — விளங்கும்
மௌனத் திரையிதுவோ ?

4

கனவுகாண் சாளரமோ ? — விதியின்
கன்னத் திடும் முத்தமோ ?
அன்னையின் மடியினிலே — குழந்தை
அழா திருக் கின்றதோ ?

## புகழ்

புகழெனும் வேசி மகளே ! — உன்னை
பொருந்தி யிருந்தவர்க்கோர் கணக்குமுண்டோ
சகஜஉன் கண்ணின் சாடையால் — உயிரை
சாவிடம் விற்றவரை எண்ண எளிதோ ?
முகம்காட்டி நீ மொழிந்ததால் — விண்ணின்
முடியையும் இழந்திட்ட மோகிகள் பலர்.
ரகசியம் பேசுவ தென்ன ? பகலை
ரணகள மாக்கி வைத்த இரவதுபோல்.
புகழென்னும் வேசிமகளே ......

# கவி பாரதி

பாரதி ! பாரதி ! என்று பகர் — தேச
பக்தி பிறக்கும் — வீர
சக்தி சிறக்கும் — புவி
தன்னில் நிகரில்லா கன்னித் தமிழ்தந்த
பாரதி ! பாரதி ! என்று பகர் — கவிப்

பாங்கு துலங்கும் — உண்மை
ஓங்கி விளங்கும் — ஈசன்
ஒருவர்க் கடிமையன்றி முடிமன்னனுகிய
பாரதி ! பாரதி ! என்று பகர் — மன

பயமது ஓடும் — என்னும்
ஜெயமது கூடும் — மக்கள்
பற்றும் சுயராஜ்ய வெற்றிச்சுதந்திரம்.
பாரதி ! பாரதி ! என்று பகர் — அவன்

பாட்டுக் கீடு — இன்று
காட்டுமோ நாடு — பசிக்
கனலிடை மூழ்கியும் காலனை வென்றவன்
பாரதி ! பாரதி !................

# அருணோதயம்

அச்சவிருள் அற்றதடா
அனற்பவள ஜோதி!
ஆண் சிங்கப் பிடரி என
சிலிர்க்குதடா! சோலை

பச்சை துளிர் பொற்ற கடாய்
பள பளக்க, வாவி
பங்கயமே புன்னகைக்க,
பறவை இசை பாட,

எச்செயலும் எவ்வுணர்வும்
எழுச்சியில் முன் னேற,
இமத் துளியும் வைர மணி
எழில் தேக்கி மின்ன,

உச்சிதமாம் சுதந்திரத்தின்
குங்குமப் பொட் டென்ன,
ஒளி கூட்டி உயிர் காக்கும்
அருணோ தயம் காண்!

# தமிழ்

தமிழென்றால் அமுதத்தின் ஊற்று — தமிழ்
தன்னைபழித்திடில் தமிழ் புயற்காற்று.
தமிழென்றால் இனிய கற்கண்டு — தமிழ்
தன்னைபழித்திடில் தமிழ்வெடிகுண்டு.
தமிழென்றால் மாசற்ற தங்கம் — தமிழ்
தன்னைபழித்திடில் தமிழ் வெறிச்சிங்கம்
தமிழென்றால் குழந்தையின் உள்ளம் — தமிழ்
தன்னைபழித்திடில் தமிழ் கொடும்வெள்ளம்
தமிழென்றால் அமுதத்தின் ஊற்று...............

# விடாத கிரஹணம்

காற்றை யடைத்து 'பலூ'னதனை
கையால் தட்டி விடுவதுபோல்
சேற்று நிறத்து திரைகடல் மேல்
செம்மதி வட்டம் வரக்கண்டேன்.

2

கூனல் முதுகு கிழவன் கையில்
குளர்விளக் கேந்தி வருவதுபோல்
வான வளைவில் நிலாதவழ
வாடை கண்ணுள் சில்லிட்டது

3

வெள்ளியை உருக்கி விட்டதுபோல்
விம்மியே விரிந்த அலைகளின்மேல்
தெள்ளிய அமுதம் சிந்தியதோ!
சிரித்தது துமிகளில் சீதவொளி.

4

வெண்டாமரையின் மலர் நாடி
வண்டு தேன்குடித் தோடுதல் போல்
தண்மதி தன்னை கிரஹணம் விட
தாவி நீந்தி நீராடி.

## 5

கடலை விட்டு கரையடைந்தேன்
கடலோ அலையை விடவில்லை!
கடவுள் ஒருவன். இருக்ும்வரை
கண்ணீர் விடுமோ ஏழைகளே?

## அழகு ?

காம்பின்றி நின்றிருக்கும்—இனிய
காயாம்பூ வான வானம்.
சோம்பித் திரியாமல்—உலகைத்
தூண்டிடும் காலைச் சுடர்.
கூம்பும் இருளிடையே—கலந்து
கொஞ்சும் அமைதிக்குரல்.
ஆம்பல் நிறைப் பொய்கை—அமுதை
அள்ளிப் பொழியும் நிலா !

2

கன்னியர் கண்வீச்சு—வீரர்
கைபிடிக்கும் வெற்றிவாள்.
மின்னும் முகில் யாழில்—இடியே
மீட்டும் மழைப் பாட்டு.
தன்னலம் காணாது—புவியின்
தாபம் தவிர்க்கும் நதி.
தென்றல் குளிரேற—மழலை
சிந்தும் சிறு குழந்தை !

3

விம்மிய மோனத்தினால்—அகன்ற
விண்ணைத் தழுவும் மலை.
சிம்ம கர்ஜனையுடன்—மனது
சிதறப் பாயும் புனல்.

செம்பவள இதழும்—தாளத்
தேன்நகை காட்டும் கடல்.
பம்பும் திரைகளது—அரவின்
படமெனவே நெளிதல் !

4

அச்சந்தனை மறந்து—சிறுவர்
அம்புய வாவியிலே
மச்சம் என நீந்தல்—மரத்தில்
மந்தி எனத்தாவல்.
உச்சிப் பொழுதளவை—தனது
உடல் நிழலில் கண்டு
பிச்சை புகும் ஆண்டி—கனிந்து
பேசும் பழங் கதைகள் !

5

நெற்றியில் வேர்வையாட—நெஞ்சில்
நேசனின் ஆசையாட
சுற்றிய சேலை தன்னில்—சேற்றின்
துளிகள் தொய்யலாட
வெற்றிலைச் சாரத்துடன்—நாவில்
வித்தார சிந்தாட
பொற்றனங்கள் குலுங்க—உழத்தி
பூங்கையால் நாத்திடுதல் !

6

ஆயிரம் பிறையுடன்—பகலில்
ஆடிடும் தோகைமயில்
வாயின் மொழியின்றி—மனித
வாழ்வு சொலும் வான்வில்
தோயும் வஸந்த காலம்—பொன்னின்
சுடர்செய்யும் தீபம்
தாயின் தமிழ் மொழியில்—உயிரில்
தங்கியுள்ள தழகே !

# விளையாட்டு பொம்மை

**சேய் :**

கன்னங்கரிய உருவமம்மா—சிறு
கையுண்டு காலுண்டு கண்களில்லை !
பின்னும் முன்னுமாக என்னுடனே—ஏதோ
பித்துப்பிடித்து வருகுதம்மா !
நன்று நயந்து விளையாட—நானே
நாடிய நல்ல மரப்பாவை
தன்னை பிடித்து கை தாருமம்மா !—இதோ
தரையில் கிடக்குது பாருமம்மா !

**தாய் :**

குழலொடு யாழிசை வெட்கிடவே—மகிழ்
கூட்டும் மழலை மொழிக் குழந்தாய் !
அழலில் குளுமையைக் காண்பதுண்டோ ?—இருள்
அம்புயம் மலரச் செய்வதுண்டோ ?
பழமொடு நற் பசுபால் தருவேன்—கவி
பாரதி 'பாப்பா' இன்பாட்டுரைப்பேன்.
நிழலிதைப் பிடித்து தந்துனையே—ஒரு
நீழலாய்ச் செய்திட நெஞ்சிலையே !

## காதல்

காற்றைக் கயிற்கொண்டு கட்டிவிட்டால்
காதலும் கட்டுண்டுபோகும் மண்மேல்.
போற்றத்தகும் அரும் மானிடா !—நல்
பூவை விட்டு வண்டு நீங்குமோ சொல் ?
ஏற்றத் தாழ்வெதும் காதற்கில்லை—அது
என்ன சொல்லினும் சொல்லும் கிள்ளை
தோற்றம் அதற்கேதோ தோணவில்லை—எனில்
சொர்க்கத்திற் கப்பால் அதன் எல்லை.

2

சாதற்கு அஞ்சி நடுங்கும் பேதை
சற்றும் தெரிந்திடான் காதல் போதை
பூதலந் தன்னையே கையேந்தலாம்
பொங்கியக் காதலால் வான் நீந்தலாம்
காதலர் பூஷணம் கண்ணீர் முத்து—மனம்
கனிந்த முத்தமே அவர்கள் சொத்து
காதலர் பேச்சாடல் கண் சிமிழ்த்து—அவர்
கனவுகள் காண்பதோ கண் விழித்து.

# அவன் ?

கண்ணுண்டு அவனுக்கே நாத்திடும் பெண்கள்
கனதனங்கள் குலுங்குவதை கூர்ந்து காண
மண்ணுண்டு அவனுக்கே உழவர் வேர்வை
மழைகண்டு செந்நெல்லே மலேபோல் சேர்க்க.

## 2

கையுண்டு அவனுக்கே 'கூலி' என்று
கை கட்டி நிற்பவரின் கன்னத் தறைய
பையுண்டு பணம் முடிக்க தொந்தி யுண்டு
பசும்பாலே கன்றினுக்கும் பதுக்க லாலே.

## 3

ஏடுண்டு வட்டிக்கு வட்டி என்று
எழுத்தறியார் வாயடங்க எழுதி வைக்க
வீடுண்டு கோட்டைபோல் ஏழை மக்கள்
வெள்ளெலும்பைச் சுண்ணமென குழைத்துப்பூச.

## 4

கோலுண்டு அவனுக்கே 'பறையா எட்டேன்'
குலமதனை அளப்பதற்கு. குவலயத்தில்
வாலில்லா புலிபோல வாழு கின்ருன்
வழங்காதோ இடிமகுடம் வான்அவன் தலேமேல்!

## நிழல்

வானின் நிழலாகும் வையம் ;—மனித
வாழ்வின் நிழலாகும் வான்வில் ;
ஊனின் நிழலாகும் ஆவி ;—முழு
ஒளியின் நிழலாகும் கங்குல் !

2

கோப நிழலாகும் செந்தீ ;—சின்ன
குழந்தை நிழலாகும் தெய்வம் ;
தாப நிழலாகும் அடிமை—மனத்
தனிமை நிழலாகும் சாந்தி.

3

கலைஞன் நிழலாகும் மதியம்—கன்னி
கனவின் நிழலாகும் வைரம்
தலைவன் நிழலாகும் வெற்பு—வஞ்ச
தாசி நிழலாகும் பூனை !

4

சோற்றின் நிழலாகும் உழவன் ;—பெரும்
சோக நிழலாகும் காடு ;
ஆற்றின் நிழலாகும் இளமை ;—தியாக
அன்பின் நிழலாகும் அன்னை !

OB
-55

# நாட்டியக்காரி

ஆடுகின்றாள் அற்புதவல்லி ! — காதில்
அம்புலி ஆதவனை குழைகளாட
நீடுநீலக் கடல் மீதிலே — விம்மி
நெளிபல திரைகளில் அடவுமிட்டு
ஆடுகின்றாள் அற்புதவல்லி !

2

வையமெனும் செம்மலர்க் கைமேல் — இருட்டு
வட்டமிடும் வானவிழி முத்தமிடவே
தைய தக தக எனவே — மேகம்
தனில் குமுர் இடியாம் சதங்கை முரல
ஆடுகின்றாள் அற்புதவல்லி !

3

நட்சத்திர தந்திகள் கொண்ட — கால
நாதமெனும் யாழதை நன்று மீட்டி
கட்டுப்படா உயிர் பாட்டைப் பாடி
கவிதை எனும் எழில் அரங்கினிலே
ஆடுகின்றாள் அற்புதவல்லி !

## குயில்

குளிர்மாந் தருவின் கோட்டுக் கிளையில்
குக் கூ! குக் கூ! என குரல் விக்க
கூவுவ தேனோ கூறாய் குயிலே!
தின்ற பழத்துள் ஒன்றிய வித்து
சிக்கிற் றோநின் செழுந் தொண்டையிலே?
அந்தோ அந்தோ, அப்படி யாயின்
அடைந்த குரலை மடைதிறப் பதுபோல்
திறந்தே விடுவேன் பறந்தே வாவா!
என்றே இரங்கி யானை இயம்ப
சோலைக் கவியாம் நீலக் குயிலது
சோகம் தோய்ந்த தொனியில் சொன்னது:
"மூடிய வானக் கூடையின் கீழே
கோழிக் குஞ்சென நாழிகை போக்கி
வாழும் மானிட வாழ்வின் குருத்தே!
உண்மையைச் சொல்ல எண்ணில் உள்ளம்
அலைக்கும் காற்றில் உலர்ந்த சருகுறும்
நடுக்கம் போல படபடக் கின்றது.
எனினும், உன்னிடம் இயம்பு கின்றேன்!
எண்ணமாம் வீட்டின் இருசன் னலெனும்
கண்களின் வழியாய் காதலர் உகுக்கும்
முத்தாம் கண்ணீர் சொட்டச் சொட்ட
உற்பவ மாகிய ஒலியின் அணுக்களை
கட்டித் திரட்டி கனலையும் கலந்து

மலர்மூச் சாகிய மணத்தையும் கூட்டி
இருளின் அமைதிபோல் இன்குர லேற்று
மோன எதுகையில் வானத்து மொழியில்
கட்டுத் திட்டமில் களிப்பின் மயக்கில்
குக்கூ ! என்யான் கூறிடும் பாட்டில்
தொக்கியே நிற்கும் அருத்தம் இதுவே :
பாடு ! பாடு ! பாட்டின் எல்லை
வீடு ! வீடு ! ஜீவன் ! ஜீவன் !
ஜீவ அன்பே தேவன் ! தேவன் !
குக்கு ! குக்கு ! குக்கு ! குக்கூ !

## எச்சரிக்கை!

என்பிலா நாவில் சுவை எழுங்கால்
இருளாக இருளாக ஒளி எழுங்கால்
தன்னல மில்லா தொழிலாளர்
சக்தியில் சகம்ஆள் தகையெழாதோ ?

2

தண்ணீ ரதனில் தணலெழுங்கால்
சாவின் நிழலில் பிறப்பெழுங்கால்
மண்ணை பொன்செய் தொழிலாளர்
மதியில் புவிஆள் விதிஎழாதோ ?

3

நத்தை யிடத்திலே முத்தெழுங்கால்
நாற்றச் சகதியில் பூ எழுங்கால்
உத்தம ராகிய தொழிலாளர்
உளத்தில் உலகாள் உரமெழாதோ ?

4

தூக்கம் தனிலே கனவெழுங்கால்
சுண்டிய இஞ்சியில் உரப்பெழுங்கால்
காக்கும் தெய்வமாம் தொழிலாளர்
கருத்தில் கலிஆள் கனலெழாதோ ?

## கவிஞன்

வண்ணமுற நின்று வாசம் தந்து — இந்து
வையம் மயக்கும் மலர்களெல்லாம்
மண்ணோடு மண்ணாய் மறைந்த பின்னர் — ஒரு
மகிமை யடைந்திட மாண்புளதோ ?

2

நித்தம் வறுமையில் நெஞ்சழிந்து — தன்னை
நேசனெனச் சொல்ல யாருமின்றி
பித்தன் இவனெனக் காட்சி தந்து — மரணம்
பெற்றபின் புகழ்தனைப் பெறுபவன்யார் ?

3

காற்றினும் சிறந்த தூயநெஞ்சும் — அலை
கடலைப் பழித்திடும் ஆழ் கருத்தும்
ஊற்றைப் பழித்திடும் புத்துணவும் — இந்த
உலகினில் வாய்ந்திட்ட உத்தமன் யார் ?

4

புல்லின் பசுமையில் வான்பொலிவை — கொடும்
புலியினிடத்திலே பிரமத்தையும்
கல்லினிடத்தில் தவந்தனையும் — நுட்பக்
கண்ணினால் கண்டிடும் புண்ணியன் யார் ?

## 5

தூற்றலென கீழ்விழும் மனதை — மேல்
தூக்கி நிறுத்தி பறக்கச்செய்து
காற்றும் நுழைந்திடா வானமென — ஒரு
கட்டற்று நிற்போன் கவிஞனன்றோ ?

# சாவுக்கு விருந்து

உழவனும் அழகிய முத்தனுக்கு
ஒடிந்தது காலொன்று வாலிபத்தில்
கிழவனாய் மாறிடும் வேளையிலே
கிட்டிற் றவனையே குட்டரோகம்

2

நாட்டு வைத்தியம் செய்ததினால்
நன்மை பெரிதில்லை. நோயும்
காட்டுக் கனல்போல் உடல்பரவ
கத்தி கதறி நகரடைந்தான்.

3

வைத்திய சாலையைக் கண்டு சென்றான்
வாஞ்சையாய் முத்தனை 'வா' என்பார் யார்?
பைத்தியம் பிடித்த நாய்களைப்போல்
பாய்ந்தனர் சிற்சில பேரவன்மேல்.

4

ஏழை உழவனும் முத்தனுக்கு
என்ன செய்வதெனத் தோணவில்லை.
பாழை விளைத்திடும் நோயை எண்ணி
பலருக்கும் கும்பிடு போடலானான்

5

எத்தனை கும்பிடு போட்டிடினும்
இம்மியும் நோயது போகவில்லை !
முத்திய நோயே முடிந்திடாது
முத்தனே போஎனச் சொல்லிவிட்டார்.

6

பசியினால் காது அடைந்துவிடும்
பாழ்நோயும் கூட வதைபுரியும்
கசிந்திடும் துர்நீர் துடைப்பதற்கும்
கந்தை கிடையாது முத்தனுக்கு !

7

மாடிவீ டொன்றின் வாயலிலே
மாடென கூவி பிச்சை என்றான்
" ஆடி அமாசை விரதமடா
யாரும் இனும்சோ றுண்ணவில்லை "

8

என்று இளித்தோர் கிழவிசொல்ல
ஏங்கிக் களைத்த முத்தன்மெள்ள
இன்னொரு வீட்டின் படியடைந்து
இழவொன் றிருப்பதைக் கண்டகன்றான்.

9

மற்றொரு மனையையும் அவன்நாட
'மார்வாரி' எனும்அம் மனையாளன்
"பற்பல பேச்சு பேசவேண்டாம்
படிதனை விட்டே நடஎன்றான்"

10

மாலை மங்கும் வரைதிரிந்தான்
வயிற்று பசிதான் தீரவில்லை.
சாலை மரநிழல் தங்குங்கால்
'சார்ஜன்ட்' டொருவன் விரட்டி விட்டான்.

11

கடற்கரை யதனை நோக்கிப்போனான்
கவ்விற்று வானையே கங்குலது.
உடல்தளர் வுற்ற முத்தனுக்கு
உணர்வு மெள்ள குறைந்ததுவே.

12

வீசும்அலைகடல் காற்றினிலே
விழிகள் மூடி பசிமறந்து
மாசிலா தூக்கம் தனில்மூழ்கி
வைய நினைவுற் றெழுந்திடுங்கால்.

## 13

கண்ணில் தூக்கம் படிந்ததுபோல்
கடல்மேல் இருட்டு இருந்ததையும்
எண்ணம் எரிவது போலவீதி
இருந்த தீபம் எரிந்ததையும்.

## 14

பார்க்கவே முத்தன் பலநினைந்தான்
பசிதான் வயிறை எரித்திடவும்
ஆர்த்தெழும் கடல்நீர் அருந்திடவே
ஆவலாய் சென்றான். அருந்தவில்லை.

## 15

உப்பு உரைத்த நீர்குடிக்க
ஒவ்வா தவன்வாய் குமட்டியது
எப்படி நகரம் சென்றிடுவான்
ஏவரங் கிரங்குவர் ஏழைகட்கு ?

## 16

விரட்டி அடிக்கும் நகரத்தையும்
வேட்கை அகற்றா கடல்நீரையும்
பறக்க இறக்கையில் பறவைஎன
பார்த்து பதைத்து பசியில்லா

## 17

அலைகடல் தன்னையும் நகரினையும்
அசையா இமையுடன் மாறிமாறி
நிலைத்த விழியுடன் நோக்கிவிட்டு
நிமிர்த்தினன் வதனம் வான்நோக்கி.

## 18

இருள்தோய் திருந்தது எட்டாவான்:
இந்து ஒளியது காணவில்லை.
பொருமி அழுதன தாரகைகள்
பொத்தென வீழ்ந்தனன் முத்தன் மணல்!